# வடவை மாதா குரலொலி

## ....... ஆகஸ்ட் 2016 .......

ஆசிரியர்

**எம். சேவியர் சந்திரகுமார்**

ஆசிரியர் குழு உறுப்பினர்

**டி.எம். ஜேம்ஸ் மார்ட்டின்**

மற்றும் பலர்

வடிவமைப்பு :

**ஏ.கே.எஸ். கிரியேடிவ்'ஸ்**

(அ. காதர் மொய்தீன்)

அச்சகம் :

**ஜே.எம்.பிராசசஸ்,** சென்னை-14.

வெளியிடுபவர் மற்றும் ஆசிரியர்



**எம். சேவியர் சந்திரகுமார்**

1/448, பிள்ளையார் கோவில் தெரு,

கேளம்பாக்கம் - 603 103.

காஞ்சிபுரம் மாவட்டம்.

தொலைபேசி : 98845 38281

மின்னஞ்சல் :

**icdsxavier@gmail.com**


புதுப்பொலிவுடன் -

## இணையதளத்தில் வடவை மாதா குரலொலி

வாசகர்களே...
தொடர்ந்து... வடவை மாதா குரலொலி பத்திரிகையை இணைய தளத்திலும்

**நீங்கள் காணலாம்.**

உங்கள் கருத்துக்களை தவறாது பதிவு செய்ய மறவாதீர்கள். உங்கள் ஆதரவுக்கு நன்றி!

இணைய தள முகவரி

**www.vadavaimadhakuraloli.com**

- ஆசிரியர்

ஆசிரியர் உரை

வடவைமாதா குரலொலி பத்திரிகையை கடந்த பல வருடங்களாக யாருமே செய்ய இயலாத குறைந்த விலையில் செய்து கொடுப்பவர் இஸ்லாத்தை சிறப்பாகக் கடைபிடிக்கும் அலி முகம்மது சையத் என்கின்ற இஸ்லாமியர்.

ஒவ்வொரு முறையும் ஜுலை மாத இறுதியில் என்னிடம் அவர் கேட்கும் கேள்வி "புத்தகம் எழுத ஆரம்பித்தாகிவிட்டதா?" என்று! நான் கூறுவேன் "இல்லை பாய்... என்ன, எழுதுவது என்று இன்னும் தெரியவில்லை" என்பேன். அவர் கூறுவார் "அது தானாக உங்களுக்கு வந்துவிடும், இறைவன் துணை செய்வார்" என்பார் அவர்.

அதுபோலவே, ஒரே வாரத்தில் எழுதி, கம்ப்யூட்டரில் கூடவே இருந்து ஒருசில தவிர்க்க முடியாத சில எழுத்துப் பிழைகளுடன், ஆனால் நேர்த்தியாக வெளிவந்து விடும் "குரலொலி"

இந்த ஊக்கம் வேறு யார் தருவார்..?

**- மு.சேவியர் சந்திரகுமார்**





- எம். சேவியர் சந்திரகுமார்

# கிறிஸ்தவ மயமாகும் டென்னிஸ் உலகம்



இன்று உலகிலேயே அதிகமாக விரும்பப்பட்டு, பார்க்கப்படும் இரண்டு விளையாட்டுத் தொடர்களுள் ஒன்று கிரிக்கெட், மற்றொன்று டென்னிஸ்.

கிரிக்கெட்டுக்கும், டென்னிசுக்குமுள்ள பெரிய வித்தியாசமென்னவென்றால், கிரிக்கெட் ஒரு குழு விளையாட்டு! தனி மனிதனுடைய திற மை மட்டும் போதாது.

ஆனால், டென்னிஸ் என்பது ஒருவரோ அல்லது இருவர் சேர்ந்தோ அதன் வகையினைப் பொறுத்து விளையாடக்கூடியது.

இரண்டு விளையாட்டுக்களுக்குமே 200 கோடி பேருக்குமேல் ரசிகர்கள் உண்டு. ஆக, தனி மனித திறமை, உழைப்பு ஆகியவற்றை மட்டுமே நம்பியுள்ள டென்னிஸ்தான் நாம் இங்கு அலசப்போகும் விளையாட்டு.

உலகம் இன்றைய கால கட்டத்தில் நாட்டின் வளர்ச்சிக்கு உதவக்கூடிய வகையில் தனது திறமை களைக் கொடுக்கும் மக்களை இழந்து வருகிறது என்றுதான் கூறவேண்டும்.

தீவிரவாதிகளும், திருட்டுப்புத்தி கொண்ட வர்களும் உலக ஜனத்தொகையில் பெரும்பான்மை யாக இருக்கிறார்கள். அதற்காகத்தான் தங்களது திறமைகளைச் செயலவழிக்கிறார்கள்.

சரி.... மிச்சமிருக்கும் கொஞ்ச நஞ்சமாக இருக்கும் திறமையாளர்கள் என்ன செய்கிறார்கள்?

ஏதாவது ஒரு குறிப்பிட்ட வேலையில்

## பிரமாண்டமான டென்னிஸ் உலகம்

உலகிலேயே அதிக பணம் புழங்கும் ஒரே விளையாட்டு டென்னிஸ் மட்டுமே. 200 கோடி பேர் பார்த்து, ரசித்த பின் ஒருவரே ரூ. 115 கோடி பணத்தை பரிசாக "சுருட்டிச்" செல்லும் மாறுபட்ட விளையாட்டாகும் இது.

இந்த டென்னிஸ் விம்பிள்டன், அமெரிக்க ஒப்பன், ப்ரென்ஸ் ஓப்பன் இன்னும் பல இடங்களில் பல பெயர்களில் நடைபெறுகிறது.

ஆடவர் ஒற்றையர், பெண்கள் ஒற்றையர், ஆடவர் இரட்டையர், பெண்கள் இரட்டையர் என்று ஆரம்பித்து 16 வகையானவர்களுக் கான விளையாட்டுக்கள் மேற்கண்ட ஒவ்வொரு இடத்திலும் தனித்தனியாக நடைபெறுகிறது என்றால் இதன் பிரமாண்டம் எத்தகையது என்பது புரியவரும். ஒரே விளை யாட்டில் ஜெயித்த ஒரு வீரருக்கு ரூ. 115 கோடி பரிசு என்பதுதான் மிக உயர்ந்தபட்ச தொகை.

இந்த எல்லா விளையாட்டுக்கும் எவ்வளவு பரிசு யார் யாருக்கெல்லாம் என்று கணக்கிட்டுப் பார்த்தால் கண்ணைக் கட்டுகிறது. இன்னும் சொன்னால் நமக்கும் தாங்காது.

சேர்ந்து, வந்தோம், போனோம் என்று நடைப் பிணமாக அலைகிறார்கள். அதாவது அவர்களது நோக்கமெல்லாம் குண்டுச் சட்டியிலேயே குதிரை ஓட்டி மாதச் சம்பளம் ஒன்றையே நம்பி முடங்கி வருகிறார்கள்.

அவர்களுள் பலர், முயற்சியின் எல்லை வரை போகும்போது, நல்ல முறையில் வாழ்வில் உயருகிறார்கள் என்பதும் உண்மையே! ஆனால் எத்தனைபேர் இறைவனுக்கு சாட்சியாக வாழ வேண்டுமென்று எண்ணுகிறார்கள்!

ஏராளமான மதங்களைச் சார்ந்த மனிதர்கள் மத்தியில் ஒரு குறிப்பிட்ட மதத்தினர் மட்டும் எழுப்பிப் பிரகாசிக்க முடியாத அளவுக்கு, நல்ல கிறிஸ்தவர்கள் ஒரு சதவீதம்தமான் தேறும் என்று சுருங்கியல்லவா போய்விட்டார்கள்!!ந்

ஆக, இந்த மகாகுழப்பமான சமூக சூழலிலே டென்னிஸ் விளையாட்டு வீரர்களுள் முன்னணி வீரர்களின் வாழ்க்கையை ஆராய்ந்தால் பிரமிக்கக் கூடிய உண்மைகள் வெளிப்படுகின்றன.

அந்த உண்மைகளை வெளிக் கொணர வேண்டுமென்பதே நமது இந்த எழுத்துப் பணியின் நோக்கமாகும்.

அப்படி என்ன விசேஷம் டென்னிஸில்..?

விடையைக் கூறுவதற்கு முன்பு டென்னிஸ் விளையாட்டு பற்றி நாம் தெரிந்திருக்க வேண்டியது அவசியமல்லவா? (பார்க்க பெட்டிச் செய்தி)


டென்னிஸ் என்பது வருடந்தோறும் லண்டன், அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய இடங்களில் 16 வகையான தரப்பினருக்கு நடத்தப்படும் விளையாட்டு.


இந்த பதினாறு தரப்பினருக்கான விளையாட்டுக்களில் மிக முக்கியமானது ஆடவர் ஒற்றருக்கான 'க்ராண்ட் ஸ்லாம்' பட்டத்துக்கான விம்பிள்டன் டென்னிஸ் விளையாட்டு!

2016–ல் சுமார் 125 கோடி சன்மானத்தைப் பெற்று ஜெயித்தவர் யார் தெரியுமா?

**அ**ண்டிமுரே!

சரி இதற்கு முந்திய வருடங்களில் தொடர்ந்து ஏழுமுறை இதே பட்டத்தை பெற்று முன்னிலையில் இருந்தவர் யார் தெரியுமா?







**ரோ**ஜர் பெடரர்!

அதேபோல, 2016–ல் பெண்கள் ஒற்றையரானாலும் சரி, பெண்கள் இரட்டையர் டென்னிஸானாலும் சரி இவற்றில் ஜெயித்தவரும், அதிகபட்சமாக கடந்த வருடங்களில்

ஜெயித்தவரும் யார் ?

செரினா வில்லியம்ஸ் சகோதரிகள்! ஆக, மேலே சொன்ன இந்த மூன்று பேருமே கிறிஸ்தவர்கள். கிறிஸ்துவுக்காக வாழும் சாட்சிகள் என்பதுதான் ஆச்சரியம்.

அண்டி முரே ஒரு கிறிஸ்தவர். 2016−ஆம் ஆண்டின் விம்பிள்டன் டென்னிஸ் விளையாட்டை வென்றவர்.

தொடர்ந்து, கடந்த ஏழுமுறை இரண்டாவது இடத்தில் வந்தவர். இந்த முறை ஜெயித்தது அல்லது பொறுமை, உழைப்பு, விடாமுயற்சியினாலேயே ஆகும் என்று வியந்ததைப்பார்த்து சொந்த நாட்டினரான பிரிட்டனைச் சேர்ந்தவர்கள் மகிழுகின்றார்கள்.

இயற்கையிலேயே கால் பலவீனம் உள்ளவர் அண்டி முரே. பலமுறை அவரால் தொடர்ந்து விளையாட முடியாதபடி அவர் பாதியிலேயே விளையாட்டை முடித்து வெளியேறுவது சகஜமான நிகழ்வாகும்.

பொதுவாக டென்னிஸ் விளையாட்டு மிகவும் கடினமானது. சில சமயங்கள் 128 வீரர்கள் 68 குழுவிலிருந்து விளையாட ஆரம்பிப்பார்கள். சுமார் 15 நாட்கள் பல "ரவுண்டுகளாக" நடைபெறும் இந்த விளையாட்டின் கடைசி மூன்று விளையாட்டுக்கள்தான் தொலைக்காட்சியிலே ஒளிபரப்பப்படுகிறது.

ஆக, இந்த கடைசி ரவுண்டுகளுக்கு வருவதற்கே போதும் போதும் என்றாகிவிடுகிறது என்கின்றனர். இந்த விளையாட்டை நன்கு தெரிந்தவர்கள்.

கிரிக்கெட், கால்பந்து போன்ற விளையாட்டுகளில் யாருக்காவது உடம்பு சுகமில்லையென்றால் அந்த நேரத்தில் விளையாடுவதற்கு மாற்று வீரர்கள் கள மிறங்குவர். ஆனால் டென்னிஸில் மட்டும் அது முடியாது. கடைசி வரை சம்பந்தப்பட்டவரே விளையாட வேண்டும் என்கின்றனர் இவர்கள்.

அண்டி முரே விளையாடும்பொழுது எப்போதெல்லாம் முக்கிய பாயிண்டுகள் கிடைக்கிறதோ அப்போது தனது சுட்டு விரலை வானத்தை நோக்கி உயர்த்தி காட்டுவது இறை


போப் பெனடிக்குடன் அண்டிமுரே


வனுக்கு நன்றி கூறுவதற்காக என்று பலரும் நினைக்க பலமுறை அவரிடம் கேட்கும்பொழுது அதுபற்றி வாய்த்திறப்பதில்லை முரே.


**ரோ**ஜர் பெடரர்!

ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்தவரும் இதுவரை 23 முறை "க்ராண்ட் ஸ்லாம்" பட்டத்தை வாங்கியவருமான மகத்தானவர்தாம், இந்த ரோஜர் பெடரர்! 10 விம்பிள்டன் விளையாட்டில் இறுதிச் சுற்றுவரை சென்றதான சாதனையில், உலகிலேயே முதலிடத்தைப் பெற்று ஏழுமுறை பட்டத்தைப் பெற்றவரே இந்த பெடரர். பல்வேறு விதமான டென்னிஸ் சம்பந்தப்பட்ட விளையாட்டுக்கள் மூலம் ஏராளமான முறை இறுதிச் சுற்று வரை வந்தவரும் இவரே.

உண்மையான கத்தோலிக்க கிறிஸ்தவர் என்றால் அது ரோஜர் பெடரர்தாம் என்று கூறுகின்றனர் அவரை அறிந்தவர்கள்.

போப்பாண்டவர் ப்ரான்சிஸுடன் சந்தித்த நிகழ்ச்சியைப் பற்றி பேசும்பொழுது எனது முழுமையான திருப்திதரும் ஒரே நாள் இதுதவிர எதுவுமில்லை என்று பேட்டியளித்தார் பெடரர். கத்தோலிக்கர்களுக்கே உரித்தான மனித நேயத்தைக் கொண்டவராக பலவிதமான சமூகப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் பெடரர்.


மரியா ஷரபோவ்


மார்ட்டினா ஹிங்கிஸ்

# இந்திய விளையாட்டுத் துறையில் கிறிஸ்தவ வீராங்கனைகள்

பொதுவாகப் பார்த்தால் இந்திய சினிமா என்றாலும் அல்லது வேறு நிகழ்ச்சிகள் என்றாலும் கிறிஸ்தவர்களை எவ்வளவு சிறுமைப்படுத்த முடியுமோ அவ்வளவு கவ்வளவு சிறுமைப்படுத்துவதில் வல்லவர்கள் நம்மவர்கள். ரவுடிக் கூட்டத்துக்கு தலைவனாக உள்ளவர்களுக்கு கிறிஸ்தவ பெயரிட்டு, சிலுவை யணிந்து வருவதாகக் காட்டுவதையே பெரும் பாலும் பார்க்கலாம். மோசமான நடனக்காரியா? அவளுக்கு பெயர் ரீட்டா.

நிஜ வாழ்க்கையில் பார்த்தால், கிறிஸ் தவர்கள் பெரும்பான்மையானவர்கள் அலட்டிக் கொள்ளாமல் தானுண்டு, தனது வேலையுண்டு என்று இருப்பவர்கள்தாம். (பெயர் கிறிஸ்தவர் கள் இதில் சேர்த்தியில்லை) பெரும்பான்மை மதத்தைச் சேர்ந்தர்கள் இந்தியக் கலாச்சாரம் அவ்வளவு மேன்மையானது என்று பீற்றிக் கொள்வார்களேயொழிய தனது "ஒழுங்கைப்" பற்றி அவர்கள் கவலைப்படுவதில்லை.

உலக சேம்பியன்ஷிப் விளையாட்டுக் களுள் மகுடம் போன்றதுதான் ஒலிம்பிக் விளை யாட்டுக்கள். இந்த ஒலிம்பிக்கில் இந்தியா எத்தனாவது இடத்தில் இருக்கிறது என்று பார்த்தால் மிக மிக பரிதாபம்.

ஜப்பான் போன்ற சுண்டைக்காய் நாடுகளெல்லாம் முதல் ஐந்து இடங்களுக்குள் இருக்கிறது. இந்தியா மட்டும் இவ்வளவு பெரிய நாடாக இருந்துகொண்டு கடைசி ஐந்து நாடு களுள் ஒன்றாக இடம் பிடிக்கிறது எனும்போதே வெட்கத்தால் தலைகுனிய வேண்டியுள்ளது.

ஏதாவதொரு துறையில் முதலிடம் பிடிக்க கிறிஸ்தவர்கள் படாதபாடு பட்டுத்தான் முன்னேற முடிகிறது.

இசைத்துறையில் ஹாரிஸ் ஜெயராஜ், இமான், ஜேம்ஸ் வசந்தன் போன்றவர்க ளெல்லாம் தனது கடின உழைப்பின் மூலம்தான் முன்னேற முடிந்தது என்றாலும் இறைவனின் அருளும் அதற்குக் காரணம்.

இந்திய விளையாட்டு வீராங்கனை களுள் அதிக எண்ணிக்கையிலிருப்பவர்கள் கிறிஸ்தவப் பெண்கள் என்ற உண்மை கிறிஸ்தவர்களுக்கெல்லாம் பெருமை.

தமது உயராத உழைப்பின் பயனாக இந்த இடத்துக்கு வந்திருக்கும் இவர்களைப் பற்றி இங்கு பார்ப்போம்....

டிண்டு லூக்கா, ஒலிம்பிக்கில் நுழைந்த மூன்றாவது இந்தியப் பெண்மணியாகும்! சைனி வில்சன் வல்சம்மா போன்றவர்களைப் பற்றி சொல்லத் தேவையில்லை. பலமுறை பல்வேறு பதக்கங்களை பெற்றவர்கள்.

மயூக்கா ஜானி : "லாங் ஜம்ப்" விளை யாட்டில் 14 மீட்டர் உயரத்திற்கு தாவிய முதல் இந்தியப் பெண் இவர்தாம்.

ஏஞ்சல் மேரி ஜான் ஆசிய விளையாட் டுக்களில் சில்வர் மெடல் வாங்கியவர்.

இதுபோன்று பல்வேறு விளையாட்டுக் களில் முத்திரை பதித்தவர்கள்தாம் மெர்ஸி குட்டன், பத்மினிதாமஸ், டெஸிமோள், அஞ்சு பாபி ஜார்ஜ், சித்ரா சோமன், சினிமோள் பவலஸ் போன்றவர்களாகும்.

மேற்கண்ட அனைத்து வீராங்கனைகளும் கேரள மாநிலத்தின் மலைப்பகுதி கிராமங்களில் பிறந்தவர்கள் என்பது கூடுதல் செய்தி.

*உலக முழுவதுமுள்ள சிறுவர்களுக்கான கல்வி மற்றும் விளையாட்டு வளர்ச்சிக்கு உதவு கின்ற அறக்கட்டளையை தனது பெயரிலேயே நிறுவி அளப்பரிய சேவை செய்து வருகிறார் பெடரர்.*

***செ**ரினா வில்லியம்ஸ்!*

*பெண்களுக்கான க்ராண்ட் ஸலாம் பட் டத்தை 22 முறையும் தனது சொந்த தங்கையான வீனஸ் வில்லியம்ஸுடன் இணைந்து பெண் களுக்கான இரட்டையர் விளையாட்டில் 6 முறை பட்டம் வென்றவருமான வீராங்கனை ஆவார் இவர்.*

*ஜெகோவா விட்னஸ் என்ற கிறிஸ்தவப் பிரிவைச் சேர்ந்தவராகும் இந்த செரினா வில்லி யம்ஸ்.*

●

# கிறிஸ்துவை பிரபலப்படுத்தும் வீரர்கள்

ஏராளமான விளையாட்டு வீரர்கள் தங்களை முழுவதுமாக இறைவனிடம் சமர்ப்பித்தவர்களாக வாழ்கிறார்கள். தாங்கள் சம்பாதிக்கின்றன பணத்தின் பெரும்பகுதியை ஏழைகளுக்கும், இறைவனது ஊழியத்துக்கும் செலவு செய்கிறார்கள்.

**இதோ ஒரு சிலரைப்பற்றி சுருக்கமாகப் பார்க்கலாம்...**

க்ளேட்டன் ஹெர்ஷா : கல்வாரி சபை ஊழியத்துடன் இணைந்த இந்த விளையாட்டு வீரர் பேஸ் பால் சாம்பியன் – ஏழைகளின் வளர்ச்சிக்காக 11 கோடி ரூபாய் சமீபத்தில் அன்பளிப்பு செய்தவர்.

ஆலன் நிக்கி : 2012 ம் ஆண்டின் உலக பேஸ் பால் சாம்பியனாகத் திகழ்ந்தவர்.

தனது சொந்தக் காரணங்களுக்காக தற்கொலை வரை சென்றவர், இறைவன் இயேசுவைப் பற்றிப் பிடித்துக் கொண்டதால் மிழைத்துக் கொண்டார். தொண்டு நிறுவனங்கள் மூலம் ஏழைகளுக்கு மருந்துகள் விநியோகிக்கும் ஊழியத்தைச் செய்து வருகிறார்.

எரிக்விடால் : 100 மீட்டர் ஒலிம்பிக் ஓட்டப் பந்தயத்தில் தங்கம் வென்றவர். “கடவுள் என்னை ஒரு நோக்கத்திற்காகவே படைத்திருக்கிறார். நான் ஓட்டப் பந்தயங்களில் ஓடும்

## “டிம் டெபோ” சட்டம் என்றால் என்ன?



டிம் டெபோ

விளையாட்டு வீரர்கள், சர்வதேச விளையாட்டுகளில் விளையாடும் போது எந்த மாதிரியாய் நடந்துகொள்ளக் கூடாது எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று அதற்கான சட்ட திட்டங்களை உள்ளடக்கிய விதிகளே “டிம் டெபோ சட்டம்” ஆகும்.

இந்த சட்டம் கொண்டு வந்ததற்கு முக்கிய காரணமாயிருந்தவரின் பெயர் டிம் டெபா என்ற விளையாட்டு வீரர். இருபதுக் குமேற்பட்ட தங்கம், பட்டங்கள் ஆகியவற்றைப் பெற்றுள்ளார் இவர்.

இவரது முழுப்பெயர் திமோத்தி ரிச்சார்ட் டெபோ. இவர் ஆழ்ந்த கிறிஸ்தவப் பற்றுள்ளவர். பைபிளின் வசனங்களை அவரது கண்களின் புருவத்திற்கு அடியில் சிறிதாக எழுதிய நிலையில் விளையாட்டுப் போட்டிகளில் விளையாடுவது இவரது இயல்பு.

இம்மாதிரியாக மிகவும் “ஓவராக” இவர் செயல்பட்டதாலேயே, சர்வதேச விளையாட்டுத்துறை தானியற்றிய சட்ட திட்டங்களுக்கு இவரது பெயரையே வைத்துவிட்டது.

இதிலென்ன சுவாரசியம் என்றால் நூற்றுக்கணக்கான கிறிஸ்தவ விளையாட்டு வீரர்கள் பல்வேறு காரணங்களால் பல்வேறு போட்டிகளில் பங்குபெற இயலாது போட்டியைத் தவிர்த்துள்ளனர் என்ற செய்தியாகும்.

குறிப்பாக மிக்கேல் ஜோனல் எரிக் லிடால், இவான்முரே, வில்கோப் பேட் உட்பட பலர் ஞாயிறு தினங்களில் இறுதிச் சுற்று விளையாட்டுக்களில் கலந்துகொள்வதைத் தவிர்த்ததாலேயே அவர்களது வெற்றி வாய்ப்பை இழந்துள்ளனர்.

ஞாயிறு ஓய்வு தினம் ஆகையால் கிறிஸ்தவ நெறிப்படி அன்று முக்கிய நிகழ்வுகளை தவிர்த்து விட்டதாக இவர்கள் கூறுகின்றார்கள்.எல்லோருடைய இதுபோன்ற காரணங்களை இங்கு எழுத இடமில்லை என்பதே நமது குறை.




க்ளேட்டன் ஹெர்ஷா



ஜாக்கிராபிள்சன்



எரிக்விடால்



டெரக் பிஷ்ஷர்

பொழுது என்னை வேகமாக ஓட வைக்கிறார். நான் அவ்வாறு ஓடும்பொழுத அவரது பிரச்சன் னத்தை உண்மையிலேயே உணருகிறேன். அப்பொழுது இனந்தெரியாத சந்தோஷம் என் உள்ளத்தை நிரப்புகிறது என்கின்றார் இவர்.

ஜாக்கிராபின்சன் : கருப்பர் இனத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்! “சகவீரர்கள் என்னை ஏளனப்படுத்தும்பொழுது பதிலுக்கு நான் பேசு வதில்லை” என்று கூறுமளவுக்கு நல்ல மனிதர். “எனக்கு கடவுள் ஒருவரே நம்பிக்கையளிக் கிறார்” என்கிறார் இவர்.

டெரக் பிஷ்ஷர் : நான்கு முறை விளை யாட்டில் விருது பெற்றவர். அவர் தனது அனு பவத்தை இவ்வாறு கூறுகிறார். “எனது நம்பிக்கை ஜீசஸ் மீது வைக்கிறேன். ஏதோ ஒன்றை இலக்காக வைத்து கடின உழைப்பைச் செலுத்துகிறேன். முடிவில் எவ்வகையிலேனும் வெற்றி கிடைக் கிறது. ஆச்சரியமான உண்மை”

அவிஸன் பெலிக்ஸ் : இவரது தந்தை ஒரு ஊழியக்காரர். அவிஸன் ஒலிம்பிக்கில் தங்க மெடல் பெற்றவர். விளையாட்டை “நற்செய்தியை” பரப்புவதற்கு பயன்படுத்துபவர். இறைவனைப்பற்றி சொல்ல வெட்கப்படாதவர். ஒரு தங்கம், மூன்று சில்வர், மூன்று முறை சேம்பியன் பட்டத்துக்குச் சொந்தக்காரர்.

“அபூர்வ சக்தியை இயேசு தருவதால்தான் என்னால் இவ்வாறு விளையாட முடிகிறது’ என்கிறார் இவர்.

# ஒலிம்பிக் விளையாட்டில் உலக அதிசய இயேசு சிலை



தற்போது ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் பிரேசில் நகரின் தலைநகரான ரியோடி ஜெனிரோவில் கோலாகலமாக நடைபெற்று வருகிறது. கோடிக் கணக்கானவர்கள் தொலைக் காட்சிகளிலும், நேரிலும் இதனைக் கண்டுகளித்து வருகிறார்கள்.

இந்த ரியோடி ஜெனிராவில்தான் உலகத்தின் ஏழு அதிசயங்களுள் ஒன்றாகிய இயேசு மீட்பர் சிலை உள்ளது. சுமார் எழுபத்தைந்து அடி உயரத்தில் நகரின் மையப்பகுதியில் இயற்கை எழில் சூழலோடு கூடிய உயரமான இடத்தில் மிகப் பிரமாண்டமாக அமைக்கப்பட்டிருக்கும் இந்த சிலைதான் ஏழு உலக அதிசயங்களுள் ஒன்றாக திகழ்கிறது.

ஒலிம்பிக் போட்டி நிகழ்வின் சிறப்புக்களில் இதுவும் ஒன்று. **( பார்க்க 3ம் அட்டை பக்கம் )**

# சர்ச்சை..?

# மத மாற்றத்திற்கு ஆதரவானவரா

**சர்ச்சை-1**

சத்தீஸ்கர் மாநிலத்தின் முன்னாள் முதல்வர், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அஜித்ஜோகி இவர் சில ஆண்டுகளுக்கு முன்னர் கொடிய விபத்தில சிக்கி இரண்டு கால்களையும் இழந்தாலும் அரசியலுக்கு முழுக்கு போடாமல் தீவிரமாக இயங்குவர்.

இவர் காலத்தில் சத்தீஸ்கரில் இந்துக்களை கிறிஸ்தவர்களாக மாற்றுவதற்கு உதவினார் என்பதுதான் இவர் மேலுள்ள குற்றச் சாட்டு. இவர்கூட வட இந்திய கிறிஸ்தவ சபை என்ற சபையில் சேர்ந்து கிறிஸ்தவராக மாறி விட்டார் என்பதும் இவர்மேல் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு.



சுமார் இரண்டு கோடி “மக்கள்” தொகை கொண்ட சத்தீஸ்காரில் சுமார் 75 லட்சம் பேர் பழங்குடியினர் இவர்களின் ஐந்து லட்சம் பேரை கிறிஸ்தவர்களாக்கி விட்டனர், இந்த கிறிஸ்தவக் குழுவினர் என்று பதை பதைக்கின்றன ஆர்.எஸ். எஸ் போன்ற இந்து தீவிரவாதக் குழுவினர்.

கடந்த தேர்தலின்போது பொய்ப் பிரச் சாரங்களையும் கலந்துவிட்டு, ஜோகி மீண்டும் ஆட்சிக்கு வரமுடியாமல் தடுத்துவிட்டன இந்த இந்துத்துவா குழுவினர்.

அஜித் ஜோகியிடம் கேட்டபோது, “மதத் சுதந்திரமுள்ள நாடு இந்தியா” சத்தீஸ் கரில் முறையற்ற விதத்தில் மதம் மாற்றம் செய்வதாக எந்தவித புகாரும் முறையாக பதிவு செய்யப்படாத நிலையில் தனது அரசியல் லாபத்துக்காக மாற்றுக் கட்சியினர் தாம் இவ்வாறு பொய் மூட்டைகளை அவிழ்த்து விடுகிறார்கள் என்கின்றார், இயல்பாக...

“கர்வாப்ஸி” என்ற பேரில் ஆறுலட்சம் கிறிஸ்தவர்களை தாய் மதத்துக்கு மாற்றிவிட்டதாக இவர்கள்தான் பீற்றிக் கொள்கிறார் கள். பழங்குடி கிறிஸ்தவர்களே ஐந்து லட்சம்தான் இருக்கும் பொழுது, இவர்கள் எப்படி ஆறு லட்சம் பேரை மாற்ற முடிந்தது என்று கலாய்க்கிறார் இவர்.

இப்போதைய நிலைமை என்ன?

புள்ளி விவரங்கள் என்ன கூறுகின்றன?

சமீப காலங்களில் மதம் மாறுபவர்களில் ஏராளமானோர். தமது இந்துப் பெயர்களிலேயே இயங்குவதால் அவர்களது எண்ணிக்கை அரசு கணக்கில் சேராது. கிறிஸ்தவர்கள் எண்ணிக்கை படுவேகமாகக் கூடிக் கொண்டிருக்கிறது என்கின்றது ஆய்வு.

ஜார்கண்ட், ஒடிஸா, சத்தீஸ்கர் மாநிலங் களில் கிறிஸ்தவர்களின் வளர்ச்சி அபரிதமாக உள்ளது. இந்தியாவில் அரசு பதிவுகளின்படி 2.7 சதவீதம் பேரே கிறிஸ்தவராக இருக்கின்ற நிலையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்த மூன்று மாநிலங்களில் மட்டும் சுமார் 10 சதவீதம் பேர் கிறிஸ்தவர்களாக உள்ளனர்.

**எப்படி என்கின்றார்கள் ஆராய்ச்சியாளர்கள்..? எப்புடி.?**

**ரஷ்யாவில்** **சர்ச்சை-2**

# நேற்று கம்யூனிசம்... இன்று கிறிஸ்துவம்... நாளை ?

புதிய சிக்கல் தீருமா?

விளாடிமிர் புட்டின்! இப்போதைய ரஷ்ய அதிபர். சில வருடங்களுக்கு முன்னர் தான் கத்தோலிக்கக் கிறிஸ்துவராக மதம் மாறியவர்! "பெரியண்ணனான" அமெரிக்க அதிபர் ஒபாமா வுடன் சேர்ந்து தீவிரவாதத்தை ஒருபுறம் எதிர்த்தாலும், ஒபாமா எங்கெங்கு செல்கிறர் அதாவது எந்த நாட்டில் தொழில்துறை போன்ற அமெரிக்க பொருளாதார முன்னேற்றம் என்ற பேரில் என்னென்ன செய்கிறார் என்று நோட்டமிட்டு, அதனை மறைமுகமாக முறிய டித்து அந்தந்த நாடுகளை ரஷியாவின் ஆதிக்கத் துக்குக் கொண்டு வரும் "அண்டர் கிரவுண்ட் " வேலைகளைச் செய்வதில் கில்லாடி!"


நமது நாட்டில் கூட உலகளவில் தோற் றுப்போன 'அணுமின் சக்தி மின்சாரம்' என்ற கோஷத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கூடங்குளம் அணுமின் சக்தி திட்டத்திற்கு உதவி செய்கின் றேன் என்ற பேரில் தரமற்ற பொருட்களை இந்தியாவின் தலையில் கட்டி விபத்து ஏற்பட் டால் இழப்பீடு கிடையாது என்று கனகச்சிதமாக பேரம் பேசி காசு பார்ப்பவர்.

இவர் சமீபத்தில் ரஷ்யாவில் கொண்டு வந்த மதச் சுதந்திரத்திற்கு எதிர் என்று வர்ணிக் கப்படும் மசோதாதான் ரஷ்யாவின் இப்போ தைய சூடான சர்ச்சை.

ரஷ்யாவில்தான் மதமே கிடையாது என்கிறீர்களா?

அது அந்தக்காலம், லெனின் தொடங்கி சமீப காலம் வரை கம்யூனிஸசத்தின் கோரப் பிடியில் சிக்கி கிறிஸ்தவர்களெல்லாம் நசுக்கப் பட்டதெல்லாம் அந்தக்காலம்.

நமது தேவதாய் உலகின் பல இடங்களில் தோன்றி ரஷ்யாவுக்காக ஜெப மாலை செய்யுங்கள் என்று தனது அற்புதக் காட்சிகள் மூலம் வலியுறுத்தினார்களே. சாட்சாத் அதே ரஷ்யாதான் இது.



கம்யூனிசத்தின் இதயமான போலந்து நாடே பழைய இரும்புப் போப்பாண்டவர் இரண்டாம் ஜான்பால் ஆசியுடன் தொழிற்சங்க புரட்சி என்று ஆரம்பித்து, முற்றிலுமாக கிறிஸ்தவ நாடாக மாறியதைத் தொடர்ந்து கம்யூனிச ஆலமரத்தின் வேராக இருந்த ரஷ்யாவும் சுக்கு நூறாக உடைந்து மதச் சுதந்திர கட்டுப்பாடுகள் முற்றிலுமாக தளர்த்தப்பட்டு பல வருடங்களாகிவிட்டது என்பதும் நமக்குத் தெரியும்.

மதச் சுதந்திரத்தை பயன்படுத்தி இதே புட்டின் தாமாகவே மனம் மாறி தனக்குப் பிடித்துப்போய், கத்தோலிக்க கிறிஸ்தவராகின ரார். திடீரென்று என்னதான் நேர்ந்தது அவருக்கு?

"கிறிஸ்தவ மதத்தை ஒருபோதும் கை வைக்கவில்லை. மதம் என்ற பேரில் தீவிரவாதக் குழுக்கள், மறைமுகச் செயல்பாடுகளைச்



கத்தோலிக்க தேவாலயத்தில்
விளாடிமிர் புட்டின்

செய்வதாக உளவுத்துறை செய்தி கொடுப்ப தால்தான் இந்த ஏற்பாடு'' என்கின்றனர். அவரது ஆதரவாளர்கள்.

அதாவது, பெந்தகோஸ்தே சபைகள், பராட்டஸ்டேண்ட், செவன்த் டே அட்வெண்ட் டிஸ்ட், ஜெகோவா விட்னஸ் போன்ற பல்வேறு சபைகள் காளான்கள் போன்று கிளம்பி (நம்மூர் போல) ஆங்காங்கே வீடுகள் தோறும் ஆரம்பித்து நடத்துவதைத்தான் தடை செய்துள்ளோம் என்கின்றார்கள் இவர்கள்.

''இந்தக் குழுக்களை முறையாக அரசாங் கத்தில் பதிவு செய்து, தேவாலயம் என்ற பேரில் இயங்கட்டுமே'' என்கிறார்கள் இவர்கள்.

ஆனால், இந்த கிறிஸ்தவ குழுக்கள் என்ன கூறுகின்றன தெரியுமா?

''சோர்ப்பச்சேவ் காலம் வரை காலில் போட்டு நசுக்குவது போன்று மதச் சுதந்திரத்தை நசுக்கியதிலிருந்து, இப்பொழுதுதான் மீண்டு வந்திருக்கிறோம். இப்போது புட்டின், சர்வாதி காரி மாதிரி நடந்துகொண்டுபழைய ரஷ்யாவை நோக்கியல்லவா, அனைவரையும் அழைத்துச் செல்கிறார், என்கின்றனர்.

பலத்த எதிர்ப்புகளுடன் கிளம்பியுள்ள இந்த சபையினர் கூறுவதும் ஞாயமாகத்தான் தெரிகிறது.

அரசியலமைப்புச் சட்டம், மனித உரிமைச் சட்டம், ஆகியவற்றிற்கு எதிரான செயலாகும் இது என்கிறார்கள் இவர்கள்.

கிறிஸ்துவின் வார்த்தைகளைத் தாங்கிய துண்டுப் பிரசுரங்களை பொது இடங்களில் விநியோகிக்கவும் தடை செய்கிறது இந்தச் சட்டம் என்கின்றனர் இவர்கள். வீட்டினுள்ளே குடும்பத்தினருடன் இயேசுவைப் பற்றி விவாதிக் கக் கூட இனி முடியாது என்று கலங்குகின் றார்கள் இவர்கள்.

**விளாடிமின் புட்டின் விளாசித் தள்ளுவதை நிறுத்திவிட்டு புத்தியுடன் நடந்து கொள்ளுங்கள் என்பதுதான் நமது கோரிக்கை.**

# என்னம்மா ... என்னய்யா ... இப்படிப் பண்றீங்களே ... நியாயமா?

மிகச் சமீபத்தில் சென்னையிலுள்ள ரயில்வே ஸ்டேஷனில் நடந்த நிகழ்ச்சி இது.

ஒரு 60 வயது கடந்த முதியவர் சற்று இளைப்பாறலாமே என்று ரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளஉட்காரும்பெஞ்சில்அமர்ந் தவர், அசதியில் அப்படியே தூங்கிவிட்டார்.

சென்னை சென்ட்ரலில் சென்று இரவு நேரங்களில் பாருங்கள்...

ஆயிரக்கணக்கான பயணிகள் காலை நீட்டிப் போட்டுக்கொண்டு, குறட்டை விட்டுத் தூங்கும் காட்சியை தினமும் பார்க்கலாம்.

பயணம் செய்பவர்களோ பயணம் செய்பவர்களை வழியனுப்ப வருகிறவர்களோ சிறிது நேரம் அமர்ந்து உடன் வந்தவர்களுடன் பேச வேண்டியவற்றைப் பேசிவிட்டு அங்கிருந்து நகர்வது எல்லா ஸ்டேஷன்களிலும் எல்லா நாட்களிலும் நடக்கும் அன்றாட நிகழ்ச்சிதான்.


அவர்களென்ன அங்கேயே இருந்து சமைத்து சாப்பிட்டுவிட்டா செல்கிறார்கள்?

ஆக, நமது "கதையில்" வரும் முதியவரும், பாவம் ஏழையோ என்னவோ, அப்படித்தான் வந்தவர் தூங்கி விட்டார்.

அங்கு வந்த ரயில்வே பாதுகாவலர் இதை பார்த்ததும் என்ன செய்தார் தெரியுமா?

தனது கையிலிருந்த லத்தியை வைத்து நன்றாக நையப் புடைத்து விட்டார். முதியவர் வலி தாங்காமல் அலறித் துடித்த அலறல் சத்தம் அந்த வட்டாரத்தையே அதிர வைத்தது.

அந்தச் சம்பவம் நடந்த நேரம் நூற்றுக்கணக்கான பயணிகள் வருவதும் போவதுமாக இருந்த நேரமாகும்.






இந்த சம்பவத்தை பார்த்த அத்தனை ஜனங்களும் சும்மாவா இருந்தார்கள்...

இங்குதான் ஆறுதலின் செய்தி வருகிறது.

திபு திபுவென்று சூழ்ந்தார்கள் மக்கள் ! முதியவரைக் காப்பாற்றினார்கள்!. ரயில்வே பாதுகாவலரை தடுத்தார்கள். நடவடிக்கையும் எடுத்தார்கள்.

ஆஹா மக்களின் இந்த சமூக அக்கறை, மனிதாபிமானம் இதனை பாராட்ட வேண்டாமா?

அதென்ன பாராட்டும் பொழுது எங்கோ இடிக்கிறதே?

ஆமாம் அதே போன்ற ரயில்வே ஸ்டேஷனில்தான் நடந்தது அந்தச் சம்பவம்!

நுங்கம்பாக்கம் ரயில்வே ஸ்டேஷன்! பாவம்.. ஒன்றுமறியாத அப்பாவி இளம் பெண். 22 வயது வரை அந்தப் பெண்ணை, ஆளாக்க அவர்களது பெற்றோர்கள் என்னென்னன தியாகம் செய்திருப்பார்கள்.

திடீரென்று ஒருவன் வந்தானாம், தன் கையிலிருந்து அறிவாளால் ஒரே வெட்டு கழுத்தில்! அதைத் தொடர்ந்து ஆறு தடவை அரிவாளால் வீசி வீசி வெட்டி ரத்த வெள்ளத்தில் சாய்த்திருக்கிறான் அந்த இளந்தளிரை.

“நூறு பேருக்குமேல் அங்கு நின்றிருக்கிறார்கள். “ஏய்” என்று குரல் கொடுக்கவுமா அவர்களால் முடியவில்லை.?

கையிலிருந்த டிபன் பாக்ஸை அவன் மீது விட்டெறிந்திருந்தாலே அவன் கொஞ்சம் சலனப்பட்டு விலகியிருப் பானே?

சமூக வலைத் தளங்களில் அடுத்தவர்களை காய்ச்சி, வறுத்து, “கமெண்ட்” எழுதி விளாசத் தெரிகிறது இவர்களுக்கு...!

நான்கு பேர் ஒருசேர அவனை நோக்கி ஓடினால் கூட அந்த “நாய்” பறந்திருக்கும். அவனைப் பிடித்திருக்கலாம்.

அத்தனையையும் செய்துவிட்டு ரயில்வே ட்ராக்கில் சாவதானமாக நடந்து சென்றிருக்கிறான் அந்த படுபாவி.

நான்குபேர் நான்கு கல்லைத் தூக்கி எறிந்திருந்தால் அவன் பிடிபடுவானோ தப்பி விடுவானோ அதுபற்றி கேள்வியில்லை. நமது சமூக ஒற்றுமையையோ மானத்தையயாவது காப்பாற்றி இருக்கலாமே.

**இதுதான் தமிழனா..?**
**தமிழ்நாடா...?**
**சிந்திக்க வேண்டிய நேரமிது.**



# ரூம் போட்டு யோசிப்பாய்ங்களோ....

இப்படித்தான் சொல்லத் தோன்றுகிறது, மத்திய அரசின் புதுப்புது அறிவிப்புகள் பற்றி...

எங்கிருந்துதான் இதுமாதிரி யோசனைகளெல்லாம் வருகிறதோ என்று வியக்குமளவுக்கு அப்படிப்பட்ட அறிவிப்புகளெல்லாம் திட்டங்களாக வெளிவருவது வரவேற்கத் தகுந்ததுதான்...

ஆனால் அந்தத் திட்டங்களெல்லாம் எப்படிப்பட்டவையாக உள்ளது என்பதுதான் கேள்வி. "இந்துத் துவாவை" எவ்வாரேனும் மக்களது மனதில் திணித்து விட வேண்டுமென்ற வேகத்தில் எடுக்கப்படும் முடிவுகளாகவல்லவா இருக்கிறது என்பதுதான் வேதனை.

கடந்த மாதத்தில் ரிலீசான யோசனைதான் இது...

கங்கை நீரை பாட்டிலில் அடைத்து, அதனை அனைத்து சமயத்தினருக்கும் பொதுவான தபால்துறை அலுவலகங்களில் வைத்து விற்பனை செய்வதுதான் அந்தத் திட்டம்.

பொதுவாக கங்கை நீரை புனிதமாகக் கருதுவதோ, அவற்றை பூஜிப்பதோ பற்றி நமக்கு எந்தவித ஆட்சேபணையுமில்லை. ஏனென்றால் அது ஒரு சாராரின் மத நம்பிக்கை. ஆனால் அதனை பொது இடத்தில் வைத்து விநியோகிக்கும் பொழுது அதனை தீர்த்தமாகத் தான் மக்கள் நினைப்பார்கள். பருகவும் செய்வார்கள். அதனைப் பருகக்கூடிய அளவில் சுத்தமானதா என்பதுதான் நமது கேள்வி!

பொதுவாக நமது வீடுகளிலுள்ள தண்ணீரை சாப்பிடும் பொழுதே அதனை நன்றாகக் காய்ச்சி, ஆற வைத்து குடிக்க வேண்டுமென்பதே, மருத்துவர்களின் ஆலோசனை. நமது சுற்றுப் புறங்களில் கிடைக்கும் குடிநீர், ஆயிரம் மடங்கு தேவலை என்றுதான் கூற வேண்டும். கங்கை நீரை ஒப்பிடும் போது! அப்படியென்ன, கங்கை நீரில் உள்ளது.?

கங்கை நீரின் பூர்வீகம்தான் என்ன? அலகாபாத் தொடங்கி,, வாரனாசி, நாக்பூர், கான்பூர் என்று மிகப்பெரிய நகரங்களைக் கடந்து பதினொரு மாநிலங்கள் வழியாகப் பாய்ந்து உலகிலேயே மிக நீளமான அருவிதான் கங்கை.

அதாவது இந்திய மக்கள் தொகையின் சுமார் 50 கோடி மக்கள் தொகைக் கொண்ட மாநில மக்கள் மிக எளிதாக இந்த கங்கையில் சென்று புனித ஸ்நானம் செய்யுமளவுக்கு வசதியை இயற்கையிலேயே பெற்ற மிக அற்புத

மான நீர்த்திரளாகும் இது.

பண்டிகைக் காலங்களில் ஆயிரமல்ல, இலட்சமல்ல... சுமார் 7 கோடி மக்கள் ஒருசேர இந்த கங்கையிலிறங்கி மூழ்கி தங்களது பாவங் களையெல்லாம் கரைப்பது மட்டுமல்ல தங்களது உடம்பிலுள்ள அத்தனை அழுக்குகளையும் கரைத்து விடக்கூடிய அளவுக்கு கங்கை நீர் உதவுகிறது.

மேலே சொன்ன பதினொரு மாநிலங்களில் அமைந்துள்ள ஆயிரக்கணக்கான தோல் தொழிற் சாலைகள், சாராய ஆலைகள், துணி ஆலைகள் போன்ற பலதரப்பட்ட ஆலைகளில் மொத்தக் கழிவுகளும் கலக்கின்ற ஒரே இடம்தான் கங்கை.

கங்கை நீர் எந்த வழியெல்லாம் பாய் கிறதோ அங்கெல்லாம் மக்கள் பல் துலக்கவும், பாத்திரம் கழுவவும், துணி துவைக்கவும் பயன்படும் அருவியாக மக்களுக்கு பல விதத்தில் பயன்பட்டும் வருகிறது.

வருடக் கணக்கில் குளிக்காமல் தவம் செய்யும் நிர்வாண சாமியார்கள் மட்டும் இந்தியாவெங்கிலும் சுமார் 40 லட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் வசதியாக குளித்து சுத்தமாகும் இடம்தான் கங்கையோரக் கரைகள்.

இறந்த பிணங்களை ஈமச் சடங்கிற்காக கங்கை கரையோரம் சென்று சம்பிரதாயங்களை முடித்துவிட்டு பிணத்தை எரிக்காமல் அப்படியே கங்கை நீரில் மிதக்க விட்டு விட்டு செல்லுவது இன்றைய வழக்கம். இவ்வாறு தின மும் கங்கையில் நூற்றுக்கணக்கான பிணங்கள் எறியப்படுகின்றன.

இப்படிப்பட்ட நீரை பாட்டிலில் அடைத்து பிரசாதமாக பக்தர்களுக்கு வழங்குகிறீர்களே நீங்கள் வழங்குவது 120 சதவீதமுள்ள கிருமிகள் கொண்ட நீர்தான் என்பதை ஏன்தான் நினை த்துப் பார்க்காமல் இப்படிச் செய்கிறீர்களோ என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

**இந்த தண்ணீரை, நவீன விஞ்ஞானக் கூடங்களில் முறையாக சுத்திகரித்தாவது வழங்குங்கள் உங்களுக்கு கோடி புண்ணியம்.**


ஐ.சி.டி.எஸ். நிறுவனம், கேளம்பாக்கம்.

நிறுவனத்தின் பணிகளை இனி சென்னையிலும் எதிர்நோக்குங்கள்.



27-7-2016 அன்று சைதாப்பேட்டை, (சாமியார் மடம்) நடைபெற்ற கண்புரை அறுவை சிகிச்சை முகாம்.

குறிப்பாக சைதாப்பேட்டை, திருவொற்றியூர் பகுதி மக்கள் பயன்பெறும் பல்வேறு திட்டங்கள்

பாருங்கள் எமது இணையதளத்தை :

www.icdsngo.com

தொடர்புக்கு :

எம். சேவியர் சந்திரகுமார்

இயக்குநர்-ஐ.சி.டி.எஸ்.

செல் : 98845 38281

ADVT

# அன்னை மேரியின் மகிமை..!

## இயேசுவுக்கே புகழ்

'ஆவே மரியா...

நிறைய மேடையில் அவார்டு வாங்கியிருக்கிறேன். நிறைய மேடையில் நல்ல பேச்சாளராகஇருந்திருக்கிறேன். ஆனால்எல்லாவற்றையும் விட இயேசப்பா பற்றி பேசும் பொழுது தான் அளவிட முடியாத, சொல்லுவதற்கு வார்த்தைகளே கிடைக்காதபடி நான் சந்தோஷப்படுகிறேன்.

மோகினி என்கின்ற நடிகையாகத்தான் என்னை உங்களுக்குத் தெரியும். எனது இயற்கையான பெயர் மகாலட்சுமி. நான் தஞ்சாவூர்



> கத்தோலிக்க திருச்சபையின் மகத்துவத்தை இவ்வளவு தெளிவாக தனது வாழ்வில் நடந்த துன்பங்கள் மற்றும் அற்புதங்களுடன் கன கச்சிதமாக இணைத்து வேறொருவர் கூற முடியமா என்கின்ற அளவுக்கு கிறிஸ்துவை அறியாத இந்துப் பெண்ணாக இருந்தவரும் 78 படங்களில் கதாநாயகியாக நடித்து தேசிய விருது பெற்றவருமான நடிகை மோகினி பொது மேடையொன்றில் கூறியதை அப்படியே தருகிறோம்.
>
> எல்லா தரப்பு கிறிஸ்துவர்களும் படித்து உணர இங்கே தருகிறோம். இதுபோன்ற செய்திகளை அறிய Tamil Cine Actres Actors testimonies' என்று இணைய தளத்தில் TYPE செய்தால் அனைத்தையும் Live ஆகப் பார்த்து பயனடையலாம். – ஆசிரியர்.

பிராமணக் குடும்பத்தில் பிறந்தேன். எங்க அம்மா அப்பா ரொம்ப ரொம்ப ஆச்சாரமாக என்னை வளர்த்தாங்க. எங்க மொத்த குடும்பத்திலேயும் ஒரு கலப்புத் திருமணமே இல்லாத பிராமின்ஸ். அந்த மாதிரியான ஒரு குடும்பத்தில் பிறந்து ஒரு நடிகையானதும் எனக்கு பலத்த எதிர்ப்புகள்.

ஆனாலும், என்னை ஒரு நடிகையாக வளர்க்காம பெற்றோருக்கு ஒரு பொண்ணாதான் வளர்த்தாங்க. 21 வயதில் எனக்கு கல்யாணமாயிடுச்சி. மூன்று நாள் கல்யாணம். அழகான ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. என் வாழ்க்கை மிக சந்தோஷமாக ஒரு கிசு கிசுவிலுங்கூட

# நடிகை மோகினியின் சாட்சியம்..!



மாட்டாம நன்றாய் போய்ட்டிருந்தது.

கல்யாணமாகி அமெரிக்கா போனோம். என்னுடைய கணவர் பெயர் பரத். அதுவரைக்கும் எங்களது வாழ்க்கையில் ஒரு சின்ன புயல்னு இல்லை, சின்ன ஒரு காற்று கூட அடித்ததில்லை. அங்கு போனப்ப எனக்கு ஏற்கெனவே இருந்த ஸ்பாண்டிலைட்டிஸ் என்ற வியாதி இருந்தது. அதிகமாக ஆரம்பித்தது. அப்போ 25 வயது இருக்கும்.

என்னுடைய குழந்தை ஒன்றறை வயது. அப்போ டாக்டர் சொன்னாரு முப்பது வயதில் உங்களுக்கு முதுகுத் தண்டில் ஒரு ஆப்பரேஷன் பண்ண வேண்டியிருக்கும் என்று! ஒரு ஐந்து நிமிடம் கூட என்னால் வேலை செய்ய முடியாது. குழந்தைக்கு சாப்பாடு கூட செய்ய முடியாது. அவ்வளவு வலி இருக்கும்.

டாக்டர் கிட்ட கேட்டப்போ, ஸ்பைனல் கார்டுல ஆப்ரேஷன் செய்யறது வரை அப்படித் தானிருக்கும். அப்படி ஆப்ரேஷன் செய்யும் போது ஒரு நரம்பு கட் ஆனாலும், கை விழலாம், கால் விழலாம்.. பேசர சக்தி, பார்க்கின்ற சக்தி எல்லாம் போய்விடலாம் என்று கூறினார்.

இது மாதிரி கேட்டப்போ என்னுடைய கணவரின் அப்பா, அம்மா அவர்களுக்கு ஒரே பையன் அவர்கள் மனது ரொம்ப கஷ்டப்பட்டுட்டாங்க. அவர்கள் னொன்னது ஒரு வேளை மறச்சி கல்யாணம் பண்ணிக் கொடுத்துட்டாங்களா இந்தப் பொண்ண உனக்கு வேணும்னா, இன்னொரு கல்யாணம் பண்ணிடலாமா என்று கேட்டாங்க பரத்துக்கிட்ட என் முன்னாலேயே..

**என்ன முழுமை... என்ன தெளிவு... கீழே கண்டபடி அத்தனை தலைப்புகளையும் கொண்ட வாழ்க்கை வரலாறு**

- இந்து வாயிலிருந்த தனது தேடல்....
- வியாதியின் மொத்த உருவான தனது நிலைமை....
- மெய்க் கடவுள் யாரென்று அலைந்த விதம்
- முக்கோடி தேவர்களும் கைவிட்ட நிலை...
- தற்செயலாக படிக்க நேர்ந்த பைபிள்....
- அன்றிரவே கனவில் இயேசு....
- ஞானக் கண்ணைத் திறந்த பைபிள் வசனங்கள்....
- மாதாவிடம் அடைக்கலம்...
- படிப்படியாக மெய்தேவனை அறிந்த பாங்கு...
- பிரிந்த சபையினரின் அறியாமை...
- கத்தோலிக்க மக்களின் அசமந்த வாழ்க்கை...
- வியாதிகளிலிருந்து முற்றிலும் விடுதலை
- சாட்சியாய் வாழ கத்தோலிக்கருக்கு யோசனை...
- பிரிந்த சபையினருக்கு ஆலோசனை...

**பிட்டு பிட்டு வைக்கிறார் நடிகை மோகினி...**

அன்றைய நாளில் எனக்கு ஏசப்பாவைப் பற்றி தெரியாத நேரத்திலும் கருவரையிலேயே உன்னைத் தொட்டேன் என்று ஏசப்பா கூறியபடி என் கணவரையும் அந்த நிமிஷத்திலேயே இயேசப்பா தொட்டாரு. எனக்கு இதுமாதிரி ஆகியிருந்தா அவகிட்ட இது மாதிரி நீங்க சொல்லுவீங்களா என்று என் கணவர் அவர்களிடம் கேட்டார்.

இரண்டாவது குழந்தையைத் தாங்கக் கூடிய சக்தி எனக்கு இல்லை என்று டாக்டர்கள் சொன்னதால கருக்கலைப்பு செய்ய வேண்டியதாயிற்று. இது மாதிரியான ஏராளமான நெருக்கடிகள் மத்தியில்தான் எனக்கு ஒரு கேள்வி இருந்தது.

உண்மையான கடவுள் உண்டா... இல்லையா... ஏன் எனக்கு இவ்வளவு கஷ்டம்? என் ஞாபகம் தெரிஞ்சி ஒரு பொய் சொல்லுவதற்குக்கூட நான் பயப்படுவேன். ஆனா ஏன் எனக்கு இவ்வளவு கஷ்டம் வருதுன்னு நெனச்சேன்.

ஆனால் எல்லோரும் சொன்னாங்க கர்மா! போன ஜென்மத்துல நீ பண்ணுன பாவம். அதனாலதான் உனக்கு இவ்வளவு வியாதி வந்திருக்கு இவ்வளவு பிரச்சனைகள் இருக்கு. நான் நடக்க முடியாம, என்னுடைய டான்ஸ் க்ளாஸ் எடுக்க முடியாம அதையும் மூட வேண்டியதாகப் போயிடுச்சி, டான்ஸ்சும் ஆட முடியல்ல, அதனால்தான் உனக்கு இவ்வளவு கஷ்டம்னு சொன்னாங்க. எல்லாம் கர்மான்னாங்க. இந்த கர்மாங்கறது சொல்றதுக்கு வேணும்னா நல்லா ரைமிங்கா இருக்கும், கர்மா வர்மமான்னு, ஆனால் இதற்கு வந்து ஹிண்டுயிஸத்திலேயோ, இஸ்லாமிலேயோ, சீக்கிய மதப் பிரகாரமோ அல்லது புத்த மதப் பிரகாரமோ ஜைன மதப் பிரகாரமோ இதற்கு விடைதான் என்ன என்று தேடினால் எதிலேயேமே இதற்கு விடை கிடையாது.

நம்ம பண்ணுன பாவங்களுக்கு என்ன பரிகாரம். ஹிண்டுயிஸம்ல, ஜாதகக்காரன் கிட்டே அனுப்புவாங்க. அவன் சுக்கிரன் வந்து புதன பார்க்கிறான். புதன் சனியப் பார்க்கிறான். சனி ராகுவைப் பார்க்கிறதில்ல அப்படின்னு எல்லாம் சொல்லுவாங்க. இதெல்லாம் பாதி சமயம் புரியும்... பாதி சமயம் புரியாது.

பாதி சமயம் பரிகாரம் வேணும்னா, இந்தக் கோயிலுக்கு போங்க அந்தக் கோயில் பாதிநேரம் சுத்துங்க இந்த பரிகாரம் பண்ணுங்க இநதப் பரிகாரம் பண்ணாதீங்கன்னு ஒரு 108 கண்டிஷன்! இதையெல்லாம் பண்ணினதுக்கு அப்புறமும், எனக்கு முதுகு வலி சரியாச்சான்னு கேட்டா சரியாகல..

இதுல எல்லாம் என் நம்பிக்கை போய்க் கிட்டே இருந்தது. அதன்பின் இந்து மதப் புத்தகங்களை வாங்கி படித்துப் பார்த்தேன். இந்து மைத்தாலஜி, தேவி பாகவதம், தேவி மஹாத்மியம், பகவத் கீதை, ராமாயணம், அப்புறம் குரான், சீக்கிய மத புத்தகமான குரு கிரந்தசாகிப் இதையெல்லாம் நான் படிக்க ஆரம்பித்தேன்.

இதுல எல்லாம் விடை கிடைக்குமான்னு பார்த்தேன். இவையெல்லாம் சொன்னது பாவங்களுக்கு பரிகாரம் இல்லை. நீங்க என்ன பாவம் பண்ணினீங்களோ, கைபோற இடத்தில விரல் போகும், விரல் போகிற இடத்தில் நகம் போகும்னுதான் இருந்தது.



இதை வந்து என்னால் ஒத்துக்கொள்ள முடியல. ஒரு 33 வயசுல ஒரு நல்ல கணவன். ஒன்றரை வயசுல ஒரு குழந்தை. ஒரு வியாதிக்காரி மாதிரி நான் எப்பவும் படுத்துக்கிட்டே இருக்கேன். இந்த விளக்கங்களையெல்லாம் என்னால் ஒத்துக்கொள்ள முடியவில்லை.

அப்பொழுது நான் தேட ஆரம்பிச்சேன். ஆனால் உண்மையான கடவுளே நீ எங்கேயோ இருக்கிற எதுவுமே கடவுளே இல்லாம, தானே உற்பத்தியாகாது. ஆனால் கடவுளே நீ யாரு.. ஆம்பிளையா, பொம்பிளையா எந்த உருவம் உனக்கு? எந்த பேரு உனக்கு எனக்கு தெரியவே தெரியாது. ஆனால் நீங்க என் முன்னால கண்டிப்பா வரணும் ஏன்னா நீங்க படைச்ச ஒரு படைப்புதான் நான். அதனால எனக்கு அந்த உரிமை இருக்கு. உங்கள கூப்பிடுறதுக்குன்னு சொல்லி மூன்று வருஷம் இந்த புத்தகங்களையெல்லாம் படிச்சி, இதுல எல்லாம் எனக்கு திருப்தி வராம, எப்ப பார்த்தாலும் நான் தியானம்




பண்ணிக்கிட்டே இருப்பேன். தயவு செய்ய வாருங்கள்... வாருங்கள் என்று...

அப்ப அந்த சமயத்துல எங்களுக்கு இந்தியாவுக்கு மாற்றலாகி, இந்தியா வந்துட்டோம். இந்தியாவுல எங்க வீட்டில இந்திரான்னு ஒரு பொண்ணு வேலை பண்ணிக்கிட்டிருந்தது.

அந்தப் பொண்ணு வந்து கிறிஸ்டியன். அந்தப் பொண்ணு எப்பவும் ஒரு பைபிள் வச்சிருக்கும். கரெக்டா தலையணை பக்கத்துல ! ஆனா அதுக்கு படிக்கத் தெரியாது. அப்ப எனக்கு எப்பப் பார்த்தாலும் ஏதாவதொரு புத்தகத்தை படிச்சிக்கிட்டே இருக்கணும், ஏதாவது நாவலோ ஆன்மிகமோ விஞ்ஞானமோ ஏதாச்சும் ஒண்ணு இருந்துகிட்டே இருக்கணும். அன்னைக்கு என் கிட்டே எந்தப் புத்தகமும் இல்லை.

அப்ப நான் இந்திராகிட்ட கேட்டேன் "இந்திரா ... இந்திரா... நான் கேள்விப் பட்டிருக்கேன் பைபிளெங்கிறது நெறைய கதைகளின் தொகுப்புன்னு கேட்டீருக்கேன். இந்திரா அந்தப் புத்தகத்தைக் கொடுக்கிறியா நான் படிச்சிட்டு தர்ரேன்.

"எந்த புத்தகம்...?"

"உன் பைபிள்"

"அக்கா... பைபிள் வந்து உங்களுக்கு கதை புத்தகமாக்கா?"

"அம்மா உனக்கு அது பைபிள். அதை நான் ஒத்துக்கிறேன். இப்போதைக்கு எனக்கு அதை கடன் கொடு. நான் படிச்சிட்டு நான் திருப்பித் தர்ரேன்".

அந்த புத்தகத்தில ஆதாம், ஏவாள், இந்தக் கதையெல்லாம் நான் கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் நான் அந்த பைபளில்ல படிக்கும்போது அது ரொம்ப வித்தியாசமா இருந்தது. கடவுள் எப்படி ஆறு நாள்ல உலகத்தை எப்படியெல்லாம் படைச்சார். ஏழாவது நாள் எப்படி ஓய்வு எடுத்தார் அப்படியெல்லாம் இருந்தது.

நான் படிச்சிட்டு அப்படியே தூங்கிட்டேன். பைபிள் எனது பக்கத்திலேயே இருக்கு. அப்ப எனக்கு ஒரு கனவு அந்தக் கனவுனாலதான் நான் இன்றைக்கு உங்கள் முன்னால் உயிரோடு பேசிக்கிட்டிருக்கிறேன். அந்தக் கனவுனாலதான்தள்ளப்பட்டகல்மூலைக்கல்லானது என்ற பைபிள் கூற்றுப்படி நடிகையாக இருந்த நான் ஒரு தள்ளப்பட்ட கல்லாக அப்போதைக்கு இருந்தேன்.

நடிகைன்னா அவங்களுக்கு ஒரு குடும்பம் இருக்கு. ஒரு வாழ்க்கை இருக்கு, கலாச்சாரம் இருக்கு. மரியாதையிருக்குன்னு யாரும் பார்க்கிறதே கிடையாது.

எப்படிப்பட்ட நடிகையை தேர்ந்தெடுத்து உலகத்திலேயே இன்று யாருக்குமே கிடைக்காத அந்த மரியாதை, அங்கீகாரம் எல்லாம் எனக்கு கிடைக்கிறதென்றால் அதுக்கெல்லாம் காரணம் அந்தக் கனவுதான்.

எனது தேடல் எல்லாம் கர்மாவுல இருந்து காப்பாற்றக் கூடிய முக்தி கொடுக்கக்கூடிய கடவுள் எங்க இருக்கு, கஷ்டத்தை மாற்றக் கூடிய கடவுள், வியாதி மாற்றக்கூடிய கடவுள் மனுஷனுடைய கெட்ட புத்திய மாற்றக்கூடிய கடவுள் எங்கேயோ இருக்கிறார். ஆனால் அவர் எங்கே இருக்கிறார் என்றுதான் எனது தேடல்.

ஆக எனது கனவுல வந்து பெரிய பிரளயம் மாதிரி வெள்ளம். நான் ஒரு சின்ன திட்டில் நின்று கொண்டிருக்கிறேன். என்னைச் சுற்றி வெள்ளம் கட கட வென்று அதிகமாகி உயரப்பட்டுக்கொண்டே வருகிறது. நான் நினைக்கிறேன் நான் அப்படியே மூழ்கி செத்து விடுவேன் என்று.

சுற்றிலும் பார்க்கும்பொழுத, என்னைச் சுற்றிலும் நீர். இன்றைக்கு நெறைய பேருடைய வாழ்க்கையைப் பார்க்கும்பொழுது அந்த

நிலையில்தான் இருக்காங்க. ஒரு பக்கம் கடன், ஒரு பக்கம் குடும்ப சுமை, ஒரு பக்கம் பிள்ளைங் களோட படிப்பு.

ஆக, அந்த மாதிரி ஒரு பிரளயத்துக்கு நடுவில் நான் நிற்கிறேன். என் புருஷன், அம்மா, அப்பா, என் குழந்தை யாருமில்லை. இந்த வெள்ளம் தான் ஒருவருடைய பாவம். இந்த பாவம் அதாவது கர்மாவிலிருந்து நம்மை யார் காப்பாற்றுவது என்று நான் அந்த கனவிலும் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

**ஏன் இந்துவாகிய எனது கனவுல வர்ராரு. உன் கனவுல வந்தாப் போதுமே என் கனவுல பகவதிதானே வரனும் என்றேன். நான் ஏசப்பாவை நிறை ய கிண்டல் பண்ணியிருக்கேன். அவருக்கு அவரையே காப்பாத்திக்க முடியாம சிலுவையிலே செத்துப் போயிட்டாரு. அவர் எங்கேயிருந்து மக்கள காப்பாத்தப் போறாரு**

நெனச்சுக்கிட்டே நான் திரும்பும் பொழுது எனக்கு எதிரில் வேறொரு மணல் திட்டு இருக்கிறது. அந்தத் திட்டில் நான் ஒருவரைப் பார்த்தேன். அத்தனை அழகு. செதுக்கியது போன்ற உருவம். அவரைச் சுற்றிலும் ஒளி வெள்ளம். தங்கக் கலரில் தகதகவென்ற நிறம். தோள்பட்டை வளர நீண்டிருந்த நீளமான முடி. முகத்தில் அத்தனை சிரிப்பு.

என்னை அழகாக திரும்பிப் பார்த்து என்னை நோக்கி கையைக் காண்பித்தார். அப்பொழுது இன்னொரு உருவத்தைப் பார்த் தேன். காட்டு வாசி மாதிரித் தோற்றம். அந்த காட்டு வாசியினருகில் ஒரு சிறிய படகு இப்பொழுது அந்த அழகான தோற்றமுடைய வர், அநத காட்டு வாசியிடம் படகினைச் சுட்டிக்காட்டியபடியே ஏதேதோ பேசுகிறார்.

அப்பொழுது நான் நினைக்கிறேன் இந்த படகு மூலம் அவர் என்னை காப்பாற்றப் போகிறாரா? இந்த கர்மாவிருந்து பிரளயத்திலி ருந்து இந்த மரணத்திலிருந்து என்னை காப்பாற்றினால் இவர்தான் உண்மையான கடவுள் என்று நான் ஒத்துப்பேன் என்று. நான் மீண்டும் அவரைப் பார்க்கும்பொழுது என்னைப் பார்த்து அழகாகச் சிரித்தவர் தனது கையை அசைத்து கையைக் காட்டிய அதே நேரத்தில் “மம்மி” என்று எனது மகள் கத்தும் குரல் கேட்க எனது கனவு கலைந்தது.

நான் எழுந்து இந்திரா என்ற அந்த பணிப் பெண்ணிடம் சொன்னேன் “இந்திரா நான் இந்த மாதிரி ஒரு ஆளைப் பார்த்தேன்” என்று “அவள் சொன்னாள் அக்கா நீங்க யேசப்பாவைப் பார்த்திருக்கீங்கக்கா”

அவர் ஏன் இந்துவாகிய எனது கனவுல வர்ராரு. உன் கனவுல வந்தாப் போதுமே என் கனவுல பகவதிதானே வரனும் என்றேன். நான் ஏசப்பாவை நிறை யகிண்டல் பண்ணியிருக்கேன். அவருக்கு அவரையே காப்பாத்திக்க முடியாம சிலுவையிலே செத்துப் போயிட்டாரு. அவர் எங்கேயிருந்து மக்கள காப்பாத்தப் போறாரு இப்படியெல்லாம் கேட்டிருக்கிறேன். அப்ப யேசப்பா அடி லூஸு உன்னைக் காப்பாற்றவே நான்தான் வரப்போறேன் கொஞ்சம் வெயிட் பண்ணு என்று மேலிருந்து நெனச்சிருப்பாரு.

இந்த கனவுக்குப் பின் எனது தேடல் அதிகமாகிவிட்டது. இரண்டு மூன்று பேரிடம் கேட்டபொழுது அது “ஜீசஸ்” என்று சொன்னார்கள்.



**இப்படிப்பட்டவர்தான் ஜீசஸா? அவர் உண்மையிலேயே பிறந்திருக்கிறாரா? அவரை யாராவது பார்த்திருக்காங்களா? அவர் உண்மை யாகவே எனக்காகத்தான் இறந்திருக்கிறாரா என்பது எனக்கு எப்படித் தெரியும்?**

ஜீசஸ் என்றால் யார்? அவர் ஒரு கடவுள்னு சொல்லி கேள்விப் பட்டிருக்கிறேன். இவர் நிஜமாகவே உலகில் பிறந்திருக்கிறாரா? இன்றைக்கு கிருஷ்ணருக்கும் ராமருக்கும் ஒரு பிறப்பிடமே கிடையாது. 'இந்த இடம் குருசேத் திரம்' என்று சொல்கிறார்கள். ஏறக்குறைய இங்குதான் மகாபாரதம் போர் நடந்தது. இந்த இடம் துவாரகா என்று சொல்கிறார்கள். ஆனால் ஏறக்குறைய இங்குதான் கிருஷ்ணர் பிறந்திருக்கலாம்.

சிவனுக்கு அட்ரஸ் கிடையாது. விஷ்ணுவுக்கு அட்ரஸ் கிடையாது. பகவதிக்கு அட்ரஸ் கிடையாது. டூ அட்ரஸ் நமக்குத்தான் வரும் "ப்ரம்" அட்ரஸ் இவர்களுக்கெல்லாம் கிடையாது.

இப்படிப்பட்டவர்தான் ஜீசஸா? அவர் உண்மையிலேயே பிறந்திருக்கிறாரா? அவரை யாராவது பார்த்திருக்காங்களா? அவர் உண்மை யாகவே எனக்காகத்தான் இறந்திருக்கிறாரா என்பது எனக்கு எப்படித் தெரியும்? இது மாதிரி யெல்லாம் எனக்குள் கேள்விகள்.

அப்பொழுது டிசம்பர் மாதம் 2005–ம் வருடம் எனக்கு முதல் பைபிள் கிடைச்சது. பைபிளை படிக்க ஆரம்பித்தேன். முதலில் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. நீங்க யாரு. இன்னும் எனக்கு தெளிவாகத் தெரியனும் என்று நான் சாந்தோம் சர்ச்சுக்கு ஒருநாள் சென்றேன். அப்ப ஒருவர் எனக்கு ஜெபமாலை ஒன்றைக் கொடுத் தாங்க. இன்றைக்கு என் கழுத்தில் நகையோ, திருமாங்கல்யமோ இருக்கோ, இல்லையோ ஜெபமாலை மட்டும் கண்டிப்பாக இருக்கும்.

**ஜெபமாலையின்போது, நான் தினமும் கேட்பது "அம்மா நீங்க யாரு, கன்னி ஒரு மகனைப் பெற்றெடுத்தாள்" என்பதை விஞ்ஞானப்பூர்வமான நான் எப்படி ஒத்துக்கொள்வது?**

அந்த ஜெபமாலையின்போது, நான் தின மும் கேட்பது "அம்மா நீங்க யாரு, கன்னி ஒரு மகளைப் பெற்றெடுத்தாள்" என்பதை விஞ்ஞா னப்பூர்வமாக நான் எப்படி ஒத்துக்கொள்வது? இப்படியெல்லாம் சந்தேகம் ஏன் வருகிறது என்றால், மனதை நாம் மூடி வைத்திருக்கிறோம். அறிவால் நாம் யோசித்துப் பார்க்கிறோம்.

நாம் மனசால யோசிச்சாத்தான் நாம் ஏசுவை அறிய முடியுமே தவிர அறிவால நாம் ஏசுவை அறிய முடியாத மகா பெரிய கடவுள் அவர்.

எல்லாமே நான் மதர் மேரிகிட்டதான் கேட்பேன் நீங்க யாரு? உங்க பையன் யாரு? அவர் ஏன் சிலுவையிலே அப்படி பாவமா செத்துப்போனாரு. இன்னைக்கும் உயிரோடிருக் கிறார் எல்லாம் சொல்றாங்களே எப்படி?

எனது கணவர் பரத், அவருடைய நண்ப ரான மார்க் என்பவரிடம் என்னைப்பற்றி கூறி "அவருக்கு ஜீசஸ் பற்றி இன்னும் தெரிய வேண் டுமாம்" என்று கூற அவர் "நான் வேண்டுமென் றால் சர்ச்சுக்கு கூட்டிக்கொண்டு போகிறேன் என்று கூறி எழும்பூரிலிருந்த ஒரு சி.எஸ்.ஐ. சர்ச்சுக்கு கூட்டிச் சென்றார்.

எனக்கு முதன்முதலாக பைபிளை கொடுத்தது பிராட்டெஸ்டேண்ட்! முதன் முதலாக ஒரு சபைக்குச் சென்றது ஒரு சி.எஸ்.ஐ.

நம்ம பாதர் மாதிரியே ஒரு உடையை போட்டுக்கொண்டு வந்து பிரசங்கம் பண்ண ஆரம்பிக்கும் பொழுது எந்தெந்த கேள்வி களையெல்லாம் மதர் மேரி கிட்ட கேட்டேனோ அந்தக் கேள்விகளுக்கொல்லாம் அவர் செய்த பிரசங்கத்தில் எனக்கு பதில் கிடைத்தது.

இந்த பூமியிலே பாவங்களை மன்னிக்கிற அந்த அதிகாரம் மனுஷ புத்திரனுக்கு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு பாவத்த

“நீ எவ்வளவு பாவம் செய்தாலும், பனி போல அவற்றை மென்மையாக மாற்றுவேன்” என்று சொன்னதை அந்தப் பிரசங்கம் மூலம் மேலும் அறிந்துகொண்டேன்.

மன்னிகறதுக்கு இந்த விதமான சூப்பரரான கடவுள் நம்ம கிட்ட இருக்கும் பொழுது, நான் உன்னிடம் வரல்ல. ஆனால் என் பாவத்தை மட்டும் மன்னிச்சிடு என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.



# ரஜினி சொன்ன குட்டிக்கதை

‘சமீபத்தில் டி.டி.ரங்கராஜன் நடத்திய நிகழ்ச்சியில் பார்த்தேன். அவர் ஒரு சம்பவம் சொல்றாரு.

அமெரிக்காவுல ஒரு ரயிலில் ஒரு விஞ்ஞானி போய்க்கிட்டிருக்காரு. அவர் பக்கத்தில் அவரவிட கொஞ்சம் சின்ன வயசு. அந்த சின்ன வயசுக்காரர் ஒரு பைபிள் படிச்சிக்கிட்டிருக்காரு அவரு

“என்னப்பா பண்றே”

“பைபிள்”

“ஏம்ப்பா – அறிவு இருக்கா ஒனக்கு. இது விஞ்ஞான யுகம். எங்கேயோ போய்க்கிட்டிருக்கோம். நீயும் உன்ன “சைன்டிஸ்ட்”னு சொல்ற. நீ வந்துட்டு இன்னும் மதம், கடவுள், பைபிள், கிறிஸ்து, அப்படி படிச்சிட்டு உக்காந்திருக்கியே, நாமெல்லாம் இப்படி உக்காந்துட்டா மக்கள்லாம் என்னா ஆகிறது கொஞ்சம் கூட அறிவுங்கறது வேண்டாமா? இந்த புக்... பைபிள்... எல்லாத்தையும் தூக்கிப்போடு.. சரி.. எனக்கு நேரமாயிடுச்சி.. சரி நான் ப்ரீயா இருந்தா, இந்தா என்னுடைய கார்டு, நீ என்ன வந்து பாரு”

ஸ்டேஷன் வந்தது.

“சரி – நான் உனக்கு கார்டு கொடுத்துட்டேன், நீ ஒன்ன அறிமுகப்படுத்தலயே”

“சரி – இந்தா என்னுடைய கார்டு”

கார்டை பார்க்கிறார். அது தாமஸ் ஆல்வா எடிசன்.

அந்த சைன்டிஸ்ட் எழுந்திருச்சி “சார் மன்னிக்கணும், நீங்க எனக்கு ஒரு அப்பாயிண்ட் மென்ட் கொடுங்க”

“வாங்க இந்த டைமிலெல்லாம் வரலாம். வாங்கன்னு அவரும் சொல்றாரு.

அந்த டைமுக்கு, தாமஸ் ஆல்வா எடிச னுடைய லாபரட்டரிக்கு அதாவது பரிசோதனை கூடத்துக்கு இந்த சைன்டிஸ்ட் போறாங்க.

அந்த விஞ்ஞானி ஆராய்ச்சிக் கூடத்துல வந்து ஒரு சோலார் சிஸ்டத்தை அதாவது வான் மண்டலத்தின் மாடலை பெரிதாக தாமஸ் ஆல்வா எடிசன் வச்சிருக்காரு.

அதை அந்த சைன்டிஸ்ட் பார்த்துட்டு “இவ்வளவு அருமையா இருக்கு, இத யாரு செஞ்சது? எப்படி செஞ்சீங்க, இந்த பொருளெல் லாம் எங்க கெடச்சிது, எத்தன நாளாச்சி இது?” அப்படிக் கேட்டாரு.

“இல்லீங்க... நான் ஒன்னும் இத செய்யலீங்க, திடீர்ன்னு ஒரு நாள் வந்து, கதவ தெறந்து பாத்தேன் அது அங்க இருந்தது”

“ஹ... தமாஷ் பண்ண வேண்டாம் நீங்க சொல்லுங்க”

“நெஜங்க ... ஒண்ணுமே கெடயாதுங்க. நான் ஒன்னும் செய்யலீங்க, திடீர்ன்னு ஒருநாள், கதவ திறந்து பாத்தேன் அது எல்லாமே அங்க இருந்தது”

“சார் நான் சீரியஸா கேக்கறேன் சொல்லுங்க”

“ஏம்ப்பா... நீங்க பெரிய “விஞ்ஞானிங்க, திடீர்ன்னு இந்த வான் மண்டலம்லாம் உருவாயிடிச்சின்னு சொல்றீங்க, திடீர்ன்னு அப்படி அது உருவாகும்போது இது மட்டும் உருவாகாதா?

When there is a creation there should be a creator படைப்பு இருந்தால் படைப்பாளி ஒருவர் இருந்துதான் ஆகனும். Without creator there is no creation ஆகவே கடவுள் இருக்கார்.

அவர் அமைதியாகிவிட்டார். மேற்கொண்டு பேசவில்லை.

> தாமஸ் ஆல்வா எடிசன் என்ற ஒரேயொரு விஞ்ஞானி கூறிய கருத்தைத்தான் ரஜினி கூறியதாகப் பார்த்தோம். ஆனால் அடுத்த இதழில் மிகப்பெரிய கண்டுபிடிப்புகளை உலகுக்குக் கொடுத்த ஏராளமான விஞ்ஞானி கள் கிறிஸ்துவைப் பற்றி என்ன சொன்னார்கள் என்பது பற்றிய விரிவான கட்டுரையை எதிர்ப் பார்க்கலாம். – ஆசிரியர்

அடுத்த இதழில்

## கிறிஸ்துவத்தை பற்றி பிற நடிகர்கள், நடிகைகள்



மோகினியைத் தொடர்ந்து இணைய தளத்தில் கிறிஸ்தவ சாட்சிப் பிரசங்கம் செய்யும் பிற தமிழ் நடிகர், நடிகைகளின் பெயர் பட்டியல் இதோ.. நடிகர்கள் சாருஹாசன், ஆனந்பாபு, செந்தில், குமரிமுத்து, ராமராஜன் மற்றும் நடிகைகள் நக்மா, ஆர்த்தி, ஜெயசுதா உட்பட பல சின்னத்திரையைச் சார்ந்த பலரும் இதில் அடங்குவர்.

“நீ எவ்வளவு பாவம் செய்தாலும், பனி போல அவற்றை மென்மையாக மாற்றுவேன்” என்று சொன்னதை அந்தப் பிரசங்கம் மூலம் மேலும்அறிந்துகொண்டேன். அப்படி பாவத்துல இருந்து விடுதலை பெற்றால், நமக்கிருக்கும் வியாதி, அகந்தை, எல்லா பிரச்சினைகளும் கண்டிப்பாக சுத்தப்படுத்தப்படும் என்பதை உணர்ந்தேன்.

**இதையும் இயேசப்பாவிடம் தான் கேட்டேன். அப்பா, சி.எஸ்.ஐ, இ.எஸ்.ஐ. ஆவியுள்ள சபை, ஆவியில்லா சபை, மாதாவைக் கும்பிடக் கூடாது என்று சொல்றாங்க**

‘உண்மையான கடவுள் இவர்தான் என்பதை’ நான் எவ்வாறு அறிவது என்று மதர் மேரியிடம் நான் மூன்றாம் சனிக்கிழமையில் கேட்டேன். அடுத்த நாளான ஞாயிற்றுக்கிழமை சர்சுக்கு சென்றபோது உன்னை அதிசயங்களைக் காண வைப்பேன் என்று பிரசங்கத்தின் மூலம் இயேசு சொல்லியிருப்பதை அறேிந்தேன். இந்த மாதிரியானவற்றை எந்த கிருஷ்ணரும் சொல்லல. எந்த ராமரும் சொல்லல எந்த முகம்மது நபியும் சொல்லல.

அப்ப நான் மொத்தத்தையும் உணர்ந் தேன். அப்பாநீங்களஎனக்குஅப்பாவாஇருக்கிறதை உணர்ந்து யார் யாரையோ அப்பா அப்பான்னு இவ்வளவு நாளும் கூப்பிட்டிருக்கிறேன். இப்ப எனக்கு எல்லாமே புரிஞ்சது எனக்கு நீர்தான் உண்மையானவர் என்று! இன்றைக்கு எல்லாக் கடவுள்களையும் பார்த்தால் அவர்களுக்கு பொண்டாட்டி பிள்ளைகள் இருப்பார்கள் அவர்கள் மேலே தான் இருப்பார்கள். கீழே இறங்க மாட்டார்கள்.

ஆனால் நமது யேசப்பாதான் அவ்வளவு சிம்பிள். நமக்காக பூமிக்கு வந்தார். நாம் அவருக்குள்ளும்அவர் நமக்குள்ளும் இருப்பவர், இவ்வளவு சுலபமா அற்புதங்கள் வேறெங்கும் கிடைக்காது அதன்பின் ஞானஸ்நானம் எடுக் கலாம் என்று தீர்மானித்தேன். எந்த சபையில் எடுப்பது என்று பார்த்தால் அப்பப்பா ப்ராட் டெஸ்டேன்டில் எத்தனை பிரிவு. மறுபுறம் கத்தோலிக்கத் திருச்சபை, குழம்பிப் போனேன்!

இதையும் இயேசப்பாவிடம் தான் கேட் டேன். அப்பா, சி.எஸ்.ஐ, இ.எஸ்.ஐ. ஆவியுள்ள சபை, ஆவியில்லா சபை, மாதாவைக் கும்பிடக் கூடாது என்று சொல்றாங்க

அப்போ எர்ணாகுளம் என்ற இடத்துக்கு சினிமா படப்பிடிப்புக்காக சென்றிந்தேன்.

அங்கு “போட்டா” என்ற ஆஸ்ரமத்தைப் பற்றி கேள்விப்பட்டேன். அங்கு நான் சென்றேன் இதையெல்லாம் பற்றி நமக்கு கவலையே இல்லை. நாம நம்ம இருக்கிற இடத்திலுள்ள அருமை நமக்கு நன்றாக பயன்படுத்திக் கொள்வதில்லை. கத்தோலிக்கத் திருச்சபையிலி ருந்து இன்றைக்கு நிறைய பேர் கத்தோலிக்கத் திருச்சபையில் இல்லாத பொக்கிஷங்கள் வேறு திருச்சபையில் இருக்குன்னு மடத்தனமாக நம்பி அங்கு சென்று ஞானஸ்நானம் எடுத்துவிட்டு “சிஸ்டர் என்னை இயேசு நன்றாகத் தொடுகிறார் என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

நான் கோயிலில் பார்க்கிறேன் பரிசுத்த திவ்ய நற்கருணையை! இப்பொழுது வாங்குகிற விதத்தை! அப்படி உடை உடுத்திக்கொண்டு அப்படியொரு ஹீல்ஸ் செருப்பை போட்டுக் கொண்டு அடக்க ஒடுக்கமில்லாம கேக் வாக் ஸ்டைலாக நடந்து சென்று ஏனோ தானோ வென்றுஹாயாகநற்கருணையைவாங்குவார்கள்.

நீங்களெல்லாம் கொடுத்து வைத்தவர் கள். சரியான மார்க்கத்தில் பிறந்து என்னைப் போல ஏசுவைப்பற்றி தெரியாமல் அங்க இங்க அலைந்து காய்ந்து கருவாடாகப் போயி அப்புறம் இங்க வந்து இப்ப தெம்பா பேசறது மாதிரி இல்லாம ஒரிஜினலாகவே இங்க இருக்கிறவங்க! என்னுடைய இரத்தத்தையும் என்னுடைய சதையையும் நீங்கள் உண்ணும்போது எனக்கு அவங்க இருப்பாங்க. இவர்களுக்குள் நான் இருப்பேன் என்று அவ்வளவு அற்புதமாக வழி நடத்துவது மட்டுமில்லாம, பெற்றக் குழந்தைக்

காக தாய் தனது உயிரையும் கொடுப்பான்னு கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் அந்த பெற்றவளை விட அன்போடு நமக்காக தனது உயிரையேக் கொடுத்ததை நான் பார்த்தது இயேசு கிறிஸ்துவில் மட்டும்தான்.

**என்ன ஆச்சரியம் அந்த நிமிடமே அந்த முடக்குவாத வலி போயே போயிட்டது. அதன்பின் இரண்டு வருடங்கள் கழித்து இதே மாதிரி ஒரு பலி பூசையில் இங்க இப்ப இரண்டு பேருக்கு ஸ்பாண்டி லைடிஸ்" அது இப்ப நீங்கும். வியாதியில கஷ்டப்படுறாங்க அன்றிலிருந்து இன்று வரை முதுகுல ஒரு வலியும் கிடையாது. கழுத்துல ஒரு வலியும் கிடையாது.**

அப்படிப்பட்ட நற்கருணை நமது உடலுக்கு மருந்து, ஆசீர்வாதம். நான் இந்த திவ்ய நற்கருணையைப் பெற வேண்டுமென்றால் ஞானஸ்நானம் பெற்றால்தான் முடியும் என்று சொன்னார்கள்.

நான் உடனே போட்டா மையத்தில் பல பிரச்சினைகளைக் கடந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டேன்.

"ஞானஸ்நானம் கொடுக்கும்பொழுது என்ன பெயர் வைக்கலாமென எனக்குத் தெரியவில்லை. நான் ஏசுவிடமே கேட்டேன். இரண்டு பெயர் எனக்கு மனதுக்கு வந்தது. கிருஷ்டின், கிருஷ்டினா என்று ஒருவரிடம் கேட்டேன் அவர் கூறியதன்பேரில் கிருஷ்டினா என்று பெயர் வைத்துக் கொண்டேன்.

"அப்ப உங்க முதுகு வலியெல்லாம் போய்விட்டதா" என்று நிறையபேர் கேட்டார்கள். நான் வீட்டுக்குச் சென்றபின் ஆயிரமாயிரம் பிரச்சினைகள். எனது கணவருக்கு இரண்டாம் கல்யாணம் பண்ணுவதற்கு முடிவு செய்தார்கள். எனக்கு மூட்டு வலி, முதுகு வலி, சிக்கன் குனியா, இரத்தப்போக்கு, டைபாய்டு...

"அப்பா... எனக்கு இனி முடியாது..." என்றேன் இயேசுவிடம்.

தினமும் பைபிள் படித்தேன். ஐந்தே ஐந்து நாள்! கூட ஒருவரை வைத்து அவரை ஜெபம் செய்யச் சொன்னேன். என்னிடமிருந்து ஒன்றல்ல இரண்டல்ல பதின்மூன்று ஆவிகள் வெளியே சென்றதை உணர்ந்தேன். எந்த மந்திரவாதியிடமும் செல்லவில்லை. எந்த தாயத்தும் நான் கட்டவில்லை. எந்த எந்திரமும் தந்திரமும் கிடையாது.

யாருமே கிடையாது. என்னிடம் யாருமே இல்லை. என்னிடம் இருந்தது எல்லாம் ஆல் இன் ஆல் அழகுராஜா இயேசப்பா மாத்திரம்தான் !!

என்னிடமிருந்த சிக்கன் குனியா எங்க போச்சின்னு தெரியல, மூட்டு வலி எங்க போச்சின்னு தெரிய, இரத்தப்போக்கு எங்கப் போச்சின்னு தெரியல...

முடக்குவாதம் மட்டும் போகல்ல. நான் மீண்டும் "போட்டா" ஆஸ்ரமத்துக்கு போனேன். இயேசப்பா இந்த 31 வயசுல, இந்த மாதிரி வியாதி எனக்கு இருப்பது கேவலமாயிருக்கு இத நீக்கிப்போடுங்கன்னு பலிபூசை நேரத்தில் கேட்டேன் ஏன்னா கை, காலெல்லாம் வீங்கிப் போச்சி வெஸ்டார்ன் டாய்லெட்ல கூட என்னால் உக்கார முடியாது.

முன்னூறு நானூறு பேரிருந்த அந்த பலி பூசையைப் பாதர் மைக்கிள் நடத்தினார். ஜெப நேரத்தில் அவர் சொன்னார் "இப்ப ஒரு பொண்ணு முடக்கு வாதத்தில் வலி தாங்க முடியாம துடிச்சிக்கிட்டு இருக்குது. இப்ப ஆண்டவர் அவரைத் தொட்டு சுகம் கொடுக்கிறார்"

என்ன ஆச்சரியம் அந்த நிமிடமே அந்த முடக்குவாத வலி போயே போயிட்டது. அதன்பின் இரண்டு வருடங்கள் கழித்து இதே மாதிரி ஒரு பலி பூசையில் இங்க இப்ப இரண்டு பேருக்கு ஸ்பாண்டி லைடிஸ்" அது இப்ப நீங்குது. வியாதியில கஷ்டப்படுறாங்க அன்றிலிருந்து இன்று வரை முதுகுல ஒரு வலியும் கிடையாது. கழுத்துல ஒரு வலியும் கிடையாது. அல்லேலூயா..."

இயேசப்பாகிட்டபழைய படியும் கேட்க ஆரம்பித்தேன். கேட்டபடி எனது தாலியை திருச்சபையில் மந்திரித்து கட்ட எனது கணவர் அனுமதித்தார். எனது குழந்தைக்கும் ஞான ஸ்நானம் கொடுத்தோம். எனக்கு இன்னைக்கி தெரிந்த ஒரே மந்திரம் இயேசப்பா! எனக்கு எல்லாமும் எப்போவும் ஜீசஸ்தான்.

ஜீசஸ் என்னிடம் ரொம்ப "ஸ்டரிக்ட்ா" இருந்தா, உடனே நான் போவது மாதாதான். நான் தினமும் ஒரு ஜெபமாலையாவது செய்து விடுவேன். அந்த ஜெபமாலையை சொல்லாத வர்களைப் பார்த்து குறிப்பா ப்ராட்டஸ்டேண்ட் சபையிலுள்ளவர்களுக்காக நான் வருத்தப்படு கிறேன்.

நமக்கு ஒரு குடும்பமே இருக்கிறது உதவி செய்வதற்கு! நான் ஏதுாவது தப்பு பண்ணினா எனக்கு ஒரு அண்ணன் இருக்காரு, புனித அந்தோணியார்! இன்னொரு அக்கா இருக்காங்க புனித பாஸ்டினா! எனக்கு ஒரு அம்மா இருக் காகங்க பரிசுத்த மாதா! இவ்வளவு பேர் என்னைத் தூக்கி விடுறதுக்கு இருக்காங்க.

எனக்காக கடவுள் கிட்ட போயி சண்டை போட்டு எனக்கு வாங்கிக் கொடுப்பதற்கு இவ்வளவு பேர் இருக்காங்க. ஆனா இந்த ப்ராட்டஸ்டேண்ட் மக்களுக்கு யாருமில்லை. பாவம், தாயில்லாப் பிள்ளைகள் மாதிரி, அவங்களுக்காக நாம ஜெபம் பண்ணனும்.

ப்ராட்டஸ்டேண்ட் மக்கள் உங்ககிட்ட வரும்பொழுது நீங்க அவங்ககிட்ட சொல்லனும் நம்ம சபையில மட்டும்தான் திருப்பலிங்கிற ஒரு பொக்கிஷம் இருக்கு. அவங்களுக்கு திருப்பலி கிடையாது. ஆராதனை மட்டும்தானிருக்குது.

டெய்லி டெய்லி காலையிலும் மாலை யிலும் இயேசப்பாவின் திரு இரத்தத்தையும் திரு உடலையும் நாம் வாங்கிட்டு ஒரு நாள் ஆரம்பிக்கிறோம். ஒருநாள் முடிக்கிறோம்.

ஆனா/ அவங்களுக்கு மாதத்தில் ஒரே நாள் மட்டும்தான் அவங்களுக்கு நற்கருணை! அதையும் நாம நற்கருணைன்னு சொல்ல முடியாது. ஏனென்றால் அந்த திரு இரத்தத்தை யும் திரு உடலையும் கொடுக்கக்கூடிய அந்த அதிகாரம் அந்த பன்னிரண்டு சீடர்களுக்கு மட்டும்தான் ஆண்டவர் இயேசுவால் கொடுக் கப்பட்டது.

அந்த பன்னிரண்டு சீடர்களின் வழி வந்தவர்கள்தான் நமது குருமார்கள். இயேசப்பா அன்னைக்கு முதற்பலியை மாதிரியாக நடத்தியதைத்தான் தியாக வாழ்வு வாழ்ந்து இன்னும் பலி பூசையை நடத்துகிறார்கள்.

இந்த மாதிரியான வழித்தோன்றல்களாக அவர்கள் இல்லை. அவர்கள் சாப்பிடுகிற நற் கருணையில யேசப்பா கருணையால கண் டிப்பா அவர் ஆசீர்வாதம் பண்ணிக் கொடுப்பார் நீங்க அவர்களுக்காக கண்டிப்பா வேண்டிக் கனும். உண்மையான திருச்சபைக்கு அவங்களும் வரணும், உண்மையான திருமறைக்கு அவங்க மதிப்பு குடுக்கணும். எல்லாரும் யேசப்பாவின் திருஉடலாக மாறணும்னு நீங்க அவங்களுக்காக வும் ஜெபம் செய்யணும் இனிமேல் ப்ராட்டஸ் டேண்ட் காரங்க வந்து கைப்பிரதி உங்களுக்குக் கொடுத்து எங்க சபைக்கு வாருங்க அங்க அதிசயம் நடக்குதுன்னு சொன்னா அது டுட்டோரியல்... இது பல்கலைக் கழகம் னு சொல்ல தயவு செய்து மறந்திடாதீங்க.

இவ்வளவு பேருகிட்ட நான் இந்த செய்தியை பகிர்ந்து கொண்டதால் எனக்கு இதே அளவுக்கான பலனை இயேசப்பா எனக்கு அதிகரிச்சிருக்காரு.




உங்களுக்கும் இதுமாதிரி அதிகரிக் கணுமா, யார் யாருக்கு பிரச்சினை இருக்கோ அவங்க கிட்ட போய் இயேசுவைப் பற்றி சொல்லுங்க. வெட்கப் படாதீங்க அப்புறம் இயேசப்பா என்ன செய்வாரு? பரம பிதா கிட்ட நம்மைப் பற்றி சொல்ல இயேசு வெட்கப் படுவாரு.

**இயேசுவைப் பகிருங்கள், இயேசுவில் வளருங்கள், அவரில் சந்தோஷப்படுங்கள் அல்லேலூயா... ஆவே மரியா... மரியே வாழ்க..!**

அடுத்த மாதத்தில் புனிதர் பட்டம் பெறப் போகிறார் அன்னை தெரசா.

பாப்பரசர் பிரான்சிஸ் வழங்கப்போகும் இந்த பட்டம், அவரது பூவுலக சேவைக்காகவா என்றால் ஒரு சதவீதம் கூட அதுவல்ல காரணம்.

இறைவனால்அங்கீகரிக்கப்பட்டமனிதர் என்று உலகுக்கு காட்டுவதே புனிதர் பட்டத்தின் நோக்கம்.

இறைவன் இயேசுவிடம் அன்னை தெரசாவால் பூவுலக மனிதர்களுக்காக பரிந்து பேசியதன் மூலம் நாங்கள் பயன்பெற்றோம் என்று சாட்சியமாக நிற்பவர்கள் ஒன்றல்ல இரண்டல்ல.... 4200 பேர்.

“இது அற்புதமல்ல... ஏற்கெனவே அவர் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெற்றதனா லேயே சுகமாகியது” என்று புறப்பட்டார் ஒரு பகுத்தறிவுவாதி.

பொதுவாக, ஒருவர் இறந்து குறைந்த பட்சம் ஐந்து வருடங்கள் கழித்தால் மட்டுமே அவர் புனிதரா இல்லையா என்ற ஆராய்ச்சியை ஆரம்பிப்பார்கள்.

ஆனால் தெரசா இறந்த 1997 ஆம் வருடத்திலிருந்து இரண்டு வருடத்திலேயே அற்புதங்களை ஆராயும் கமிட்டியை பழைய விதிகளைத் தளர்த்தி அனுமதித்தார் போப்பாண்டவர்.

## புனிதர் பட்டம் பெறப்போகும்

# அன்னை தெரசா

## தெரிந்ததும்... தெரியாததும்...



அவற்றுள் வெறும் இரண்டு அற்புதங்கள் மட்டுமே ஆராயப்பட்டு “இவை இயற்கைக்கு அப்பாற்பட்ட அற்புதங்கள்” என்று நிருபிக்கப்பட்ட காரணத்தாலேயே இந்த புனிதர் பட்டம் இப்பொழுது வழங்கப்படுகிறது.

வயிற்றில் ஏற்பட்ட புற்றுநோய்க் கட்டியால் அவதிப்பட்ட கல்கத்தாவைச் சேர்ந்த ஒரு இந்துப்பெண், தனது வயிற்றின் மீது அன்னை தெரசாவின் படத்தை வைத்து ஜெபித்தபோது படத்திலிருந்து வெளிப்பட்ட ஒளி அவளை சுகப்படுத்தியதாக சாட்சி சொல்ல, அதனை ஆராய கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. நல்லது நடந்தால் பொறுக்காதே சாத்தானுக்கு...

முதல் அற்புதத்தை எதிர்த்த பகுத்தறிவு வாதியின் வாதங்களை ஆதரித்து விவாதிக்க ஒரு குழுவும் இல்லை, அற்புதம் உண்மைதான் என்று வாதம் செய்ய மற்றொரு குழுவுமென பல குழுக்கள் அமைக்கப்பட்டு அவர்கள் கொடுத்த இறுதி அறிக்கையின் அடிப்படையிலேயே “ஆசீர்வதிக்கப்பட்டவர்” என்ற பட்டம் வழங்கப்பட்டது.

புனிதர் பட்டம் வழங்குவதற்கு வேறொரு அற்புதம் தேவை...

2008-ஆம் வருடத்தில் பிரேசில் நாட்டில் மூளைப்புற்று நோயால் அவதிப்பட்ட


போப்பாண்டவர் இரண்டாம் ஜான்பாலுடன் அன்னை தெரசா

ஒருவர் படுத்த படுக்கையாகி கோமா நிலைக்குச் செல்லவே, அவரது மனைவி ஒரு குருவான வரிடம் சென்றாள் ஜெபம் வேண்டி.

இருவரும் ஜெபித்தார்கள், மருத்துவ மனையின் சிற்றாலயத்திலேயே அன்னை தெரசா விடம் ஜெபத்தில் கெஞ்சினார்கள். இறைவன் இயேசுவிடமிருந்து அற்புதத்தை பெற்றுத்தர! ஆராய்ச்சி என்ன சொல்லுகிறது தெரியுமா?

குறிப்பட்ட அந்த தினத்தில் மாலை 6.10 முதல் 6.40 வரை அவர்கள் ஜெபித்தார்கள். அதே நாளில் மாலை சரியாக 6.40 மணிக்கு "கோமா"வில் மருத்துவமனையில் படுத்திருந்த அந்த மனிதரின் அறைக்குச் சென்ற அவரது மருத்துவர் அவர் முற்றி லும் குணம் பெற்றதை அறிந்தார். மறுநாள் வரை அனைத்து மருத்துவப் பரிசோதகைளும் நடைபெற்று மருத்துவ மனையிலிருந்து விடுவிக்கப் பட்டார் அவர்.

அன்னை தெரசாவைப் பற்றி அநேகருக்கு தெரியாத விஷயங்களும் பல உள்ளன.

ஏழைகளையும், குஷ்ட ரோகி களையும் தனது கையால் தொட்டுத் தூக்கி சேவை செய்த தெரசா பிறந்தது அல்பேனியா நாட்டிலுள்ள மிகுந்த செல்வச் செழிப்புள்ள ஒரு குடும்பத்தில். 'ஆக்னல்' என்ற பெயரால் ஆரம்பத்தில் அழைக்கப்பட்ட தெரசா, கவிதை எழுதுவதில் வல்லவர். மேண்டலின் இசைக் கருவியைத் திறம்பட வாசிக்கத் தெரிந்தவர்.

திடீரென்று அனைத்து செல்வ வாழ்க் கையையும் துறந்து, தனது 17–வது வயதிலேயே கன்னியாஸ்திரியாக மாறினார் தெரசா.





ஆக, இந்தியாவைத் தேர்ந்தெடுத்து இந்தியாவிலேயே கன்னியாஸ்திரியாகவும் ஆசிரியையாகவும் பணிபுரிந்தார்.

17 வருடங்களாக பொறுமையுடன் ஆசிரியையாக வாழ்க்கையைக் கழித்த பின்னரே அனைத்தையும் துறந்து, கல்கத்தாவிலுள்ள சேரிகளைத் தத்தெடுக்கும் "தனிச்சபையை" ஆரம்பித்தார், சகோதரி தெரசா. இந்த 17 வருடங்களில் இறைவன் பல்வேறு வழிகளில் அவருடன் பேசினார், அவர் என்ன செய்ய வேண்டுமென்று! அதன் அடிப்படையில்தான் அவரது தொண்டு ஊழியம் ஆரம்பிக்கப்பட்டது.

இரண்டு வருடங்கள் போராடியே ஆயரிடம் அனுமதி பெற்று தனி ஸ்தாபனத்தை ஆரம்பிக்க முடிந்தது.

"இருப்பவர்களுக்காக உழைக்க ஏராளமான கன்னியாஸ்திரிகள் இந்த உலகில் உண்டு. ஆனால் இல்லாதவர்களுக்காக உழைக்கும் கன்னியாஸ்தரி ஒருவர் கூட இல்லை" என்பது அன்னை தெரசாவின் கூற்று.

"ஒவ்வொரு ஏழைகளையும் அவரவரது தன்மைக்கு ஏற்றபடி தனித் தனியாக கவனிக்கும் நடைமுறையை ஏற்படுத்தியுள்ளதைப் பார்க்கும் போது, அவரது நிர்வாகத் திறமையை வியக்க வேண்டியுள்ளது" என்கிறார் அவரை ஆராயும் ஒருவர்.

தன்னந்தனியாக வெறும் ஐந்து ரூபாய் முதலீட்டில் ஆரம்பிக்கப்பட்ட அவரது நிறுவனம் நாற்பதே ஆண்டுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 4500 சேவை மையங்களை ஆரம்பிக்குமளவுக்கு பலுகிப் பெருகியது என்றால் அவர் பின்னாலிருந்து இயக்கிய சக்திதான் என்ன?

மணிக்கணக்கில் திவ்ய நற்கருணை முன்பு முழங்காலிட்டு ஜெபிப்பதில் வல்லவர் அன்னை தெரசா.

"அவர் ஜெபிக்கும் பொழுது.. அவர் உதடுகள் அசைவதில்லை. திவ்ய நற்கருணையை பார்த்துக்கொண்டே இருப்பார். யாருடனும் பேச மாட்டார்" என்கின்றனர் அவரை அறிந்தவர்கள்.

கிறிஸ்டோபர் என்ற நபர் அன்னை தெரசாவை விமர்சித்து எழுதிய கடிதங்கள் அனைத்துமே வெளிப்படையாக அனைவருக்கும் தெரியப்படுத்தப்பட்டது. ஆராயப்பட்டது.

**அதன் பின்னரே புனிதர் பட்டம் கொடுப்பதென முடிவெடுக்கப் பட்டுள்ளது என்றால் அதுதான் உண்மை.**

# உலகின் முதல் ஐந்து பெண்மணிகள்... கிறிஸ்துவின் கண்மணிகள்...

எம். சேவியர் சந்திரகுமார்

உலகின் சக்திவாய்ந்த பெண்கள் பட்டியலில், ஜெர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்கல், மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார். உலக அளவில், அரசியல், தொழில், நிர்வாகம் என பல துறைகளில், சக்தி வாய்ந்த பெண்களின் பட்டியலை ஒவ்வொரு ஆண்டும், அமெரிக்கா வின், 'போர்ப்ஸ்' பத்திரிகை வெளியிட்டு வருகிறது. இந்த ஆண்டுக்கான உலகின் சக்திவாய்ந்த, 100 பெண்கள் அடங்கிய பட்டியலில், 51பேர், அமெரிக்காவைச் சேர்ந்தவர்கள். இதற்கு அடுத்தபடியாக, சீனா மற்றும் பிரிட்ட னைச் சேர்ந்தவர்கள் இடம் பிடித்து உள்ளனர்.

இந்த ஆண்டு பட்டியலில், ஜெர்மன் பிரதமர், ஏஞ்சலா மெர்கல் முதலிடம் பிடித்துள்ளார். கடந்த, 2005ம் ஆண்டு முதல், அவர் 'போர்ப்ஸ்' பத்திரிகை வெளியிட்டு வரும், உலகின் சக்திவாய்ந்த பெண்கள் பட்டியலில் இடம் பிடித்து வருகிறார். அமெரிக்க அதிபர் தேர்தலில், ஜனநாயக கட்சியின் சார்பில் வேட்பாளர் போட்டியில் உள்ள ஹிலாரி கிளிண்டன் இரண்டாவது இடத்தில் உள்ளார். மூன்றாவது இடத்தில் மெலின்டே கேட்ஸ் உள்ளார். – நன்றி தினமலர்

சக்தி வாய்ந்த பெண்கள் பட்டியல் என்ற தலைப்பில் சமீபத்திய தினமலர் இதழில் வந்திருந்த ஒரு செய்தித் தொகுப்பைத்தான் அருகிலேயே பார்க்கிறீர்கள்.

தற்செயலாக இவர்களைப் பற்றி வாழ்க்கை குறிப்புகளை பல்வேறு கோணத்தில் அலசியபோது, நமக்கு ஆச்சரியமான உண்மைகள் கிடைத்ததன். அதாவது எவ்வளவுதான் உலகத்தையே தனது திறமையால் ஆட்டிப் படைக்கிறார்களென்றாலும் அவ்வளவு பேருமே அதாவது யூதரான ஜேனட் எல்லனைத் தவிர மீதி அனைவரும் இயேசுவிடம் சரணடைந்தார்கள் என்பதை அறிய நேர்ந்தது.

தீவிரவாதம், நாத்திகம், வீண் ஆடம்பரம், தான்தோன்றித்தனம் ஆகியவற்றின் மொத்த உருவமாக உலகின் பெரும்பாலானோர் தம்மை மாற்றிக்கொண்டுள்ள இந்த தருணத்தில், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இந்த சக்தி வாய்ந்த வர்கள் மட்டும் இயேசுவின் சாட்சிகளாக எடுத்துக்காட்டாக வாழ்ந்திட முடிகிறது என்பதை நினைத்துப் பார்த்தபோது இயேசுவின் மகிமை வல்லமை ஆகியவற்றை உணர முடிகிறது. இயேசு இன்னும் உயிரோடிருக்கிறார் என்பதையே இது காட்டுகிறது.

உலகின் சக்தி வாய்ந்த முதற் பெண்மணி ஏஞ்சலா மெர்கல்! ஜெர்மன் பிரதமர்!

ஐரோப்பியக் கூட்டமைப்பிலுள்ள ஏறக்குறைய எல்லா நாடுகளும் பொருளாதாரச் சிக்கலில் வகையாக மாட்டிக் கொண்டு தவித்த போது, மிக சாமர்த்தியமாக செயல்பட்டு ஜெர்மனியில் பொருளாதாரத்தை நிமிர்த்தியவர் இவர்.

ஜப்பானில் புக்குஷிமாவில் ஏற்பட்ட அணுஉலை விபத்தைத் தொடர்ந்து தனது நாட்டிலிருந்த மொத்த அணு உலைகளான இருபத்து மூன்று உலைகளுள் முதற்கட்டமாக 17 அணு உலைகளை உடனே இழுத்து மூடியவர் ஏஞ்சலா மெர்கல். 2020க்குள் மீதி உலைகளையும் மூடும் நடவடிக்கைகளை அதிரடியாக எடுத்துள்ளார்.

ராணுவத்தில் ஆள் குறைப்புடன் கூடிய திறமை வளர்ப்பு யுக்திகள், முதியோர் நலனுக்கான சிறப்புத் திட்டம், குறைந்த பட்ச ஊதிய நிர்ணயம், வெளிநாட்டு உறவில்



ஏஞ்சலா மெர்கல்



ஹிலாரி கிளின்டன்



மெலீண்டா கேட்ஸ்

சீர்த்திருத்தம், உட்பட பல நடவடிக்கைகளை எடுத்து முற்றிலும் ஆண்களையே கொண்ட தனது கட்சியினரின் மத்தியில் இரும்பு மங்கையாக உயர்ந்ததால்தான் இன்று, உலகின் நம்பர் ஒன் பெண்ணாக உயர்ந்துள்ளார் ஏஞ்சலா.

ஒருவன் வாழ்க்கையில் உயர வேண்டுமென்றால் இறை நம்பிக்கை அவசியம் என்கிறார் ஏஞ்சலா!

சமீபத்தில் பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் பேசும்பொழுது கூட தனது கிறிஸ்தவ நம்பிக்கையை வெளிப்படுத்தத் தவறவில்லை இவர்.

இவர் ஜெர்மன் மக்களுக்கு விடுத்த யோசனை என்ன தெரியுமா? பைபிளின் போதனைகளை வாழ்வில் கடைபிடிப்பதோடு, பழைய வழக்கமான தேவாலயங்களுக்கு செல்லுவதை மக்கள் தவறாது கடைப்பிடிக்க வேண்டும்"

"நான் ஒரு கிறிஸ்தவ நம்பிக்கை கொண்டவள்" என்று தைரியமாக முழங்கும் இந்த ஏஞ்சலா மெர்கல், நிச்சயம் இரும்பு பெண்மணிதான்.

அடுத்தவர் ஹிலாரி கிளிண்டன். இவர், முன்னாள் அமெரிக்க அதிபரின் மனைவி.

வருகின்ற அமெரிக்க அதிபர் பதவிக்கு தனது கட்சியால் முன்னிறுத்தப்பட்டு, விரைவில் அதிபராக ஆகும் தகுதியும் செல்வாக்கும் கொண்டவர். சமீபத்தில் தற்போதைய அதிபர் ஒபாமா இவரைப்பற்றி கூறும்பொழுது என்னை விட ஹிலாரி திறமையானவர் என்று புகழாரம் சூட்டியிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

தான் சாந்துள்ள மெதடிஸ்ட் தேவாலயத்துக்கு தவறாது செல்லுபவர் ஹிலாரி கிளிண்டன். "இறைவனோடு எப்பொழுதும் தொடர்பிலிருப்பது மிக மிக அவசியம்" என்கின்றார் இவர்.

"நானும் என் கணவரும் தினமும் வீட்டிலுள்ள அறையை மூடி, முழங்காலிலிருந்து இயேசுவிடம் ஜெபம் செய்கிறோம். எங்களை வழி நடத்தி அனைத்திலும் அவர் எங்களுக்கு உதவிட வேண்டுகிறோம்" என்று மனந்திறந்தார் ஹிலாரி கிளிண்டன், மெலிண்டா கேட்ஸ்

உலகின் நம்பர் ஒன் பணக்காரரான பில்கேட்ஸின் மனைவி. கேட்ஸ் பவுண்டேஷனின் தலைவி இவரது கணினி சார்ந்த கண்டுபிடிப்புகள் மற்றும் வர்த்தகத்தின் அடிப்படையிலேயே மொத்த உலகமும் இயங்குகிறது.



போப்பாண்டவருடன் மெலீண்டா கேட்ஸ் மற்றும் பில் கேட்ஸ்


கல்விச்சேவை, சுகாதாரச் சேவை போன்ற பலவிதமான தொண்டு சார்ந்த நிறுவனங்களுக்கு தங்களது பெரும்பான்மையான சொத்துக்களை செலவழித்து வரும் இந்தத் தம்பதியர் செல்லுவது கத்தோலிக்க தேவாலயத்திற்கே.

“இறை நம்பிக்கை என்பது சொல்லில் இருப்பது அல்ல. செயலில் காட்டுவது” என்கிறார் மெலிண்டா கேட்ஸ். போப்பாண்டவர் ப்ரான்சிஸ் தனக்கு மிகவும் பிடித்தவர் என்கிறார் இவர்.

# எளிமையானவர் போப் பிரான்சிஸ்

## – பட ஆல்பம்



ஆடுடன் விளையாட்டு



குழந்தையோடு குழந்தையாக



வியாதியுற்றவரிடம் பரிவு



பாதத்தை முத்தமிட்டு...


தனிமை நடை பயணம்




# வடக்கன்குளத்தில் பாதம் பதித்த

# புனித அருளானந்தர்!



அன்றைக்கு, காடாகக் கிடந்த வடக்கன் குளத்தையும் இன்றுள்ள வடக்கன்குளத்தையும் ஒப்பிட்டு நினைத்துப் பார்த்தால் நம்பவா முடிகிறது.

போர்ச்சுக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் பிறந்த அருளானந்தர் தமிழ்நாட்டின் பகுதிகளினூடே வலம் வந்தவர், தனது குதிரையின் மேலேறி சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்னர் வடக்கன்குளம் ஊருக்கு வருகை புரிந்து, அங்கு அவரது பாதம் பதிய விட்டதாலோ என்னவோ இன்று அப்படியொருவனப்புடன், மாடமாளிகை சூழ செழுமையாகக் காட்சியளிக்கிறது வடக்கன் குளம் என்றால் வியப்பாக இருக்கிறதல்லா..?

யார் இந்த அருளானந்தர்...?

போர்ச்சுக்கல் நாட்டில் ப்ரேசில் நகரின் கவர்னரின் மகனான பிரிட்டோ, தனது 15வது

வயதிலேயே இயேசு சபையில் சேர்ந்தவர் என்பது இவரைப் பற்றிய முதல் செய்தி.

தவறான தெய்வ வழிபாடுகளைக் கொண்ட இந்தியாவை அப்போதே இரக்கத் துடன் பார்த்த அந்நாட்டு திருச்சபை, பிரிட் டோவை தமிழ்நாட்டுப் பகுதிகளுக்கு அனுப்பியது.

தஞ்சாவூர், மதுரா பகுதிகளில் வந்திறங் கிய அவர் தனது போர்ச்சுக்கல் ஆடைகளைத் துறந்து, அப்பகுதியில் வசித்து வந்த மக்களைப் போன்றே உடை உடுத்தி, அப்பகுதி மக்களின் மனதில் முதலாவதாக இடம் பிடித்தார் என்பது வரலாறு.

நீண்ட நெடிய காவி அங்கி, தலையைச் சுற்றி மஞ்சள் நிறத்துண்டு! "சுவாமி" என்று அழைத்தார்கள் மக்கள். இயேசுவை இவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்த சுலபமாகி விட்டது இவரது நடையும் உடையும்.

அமைதியை இழந்திருந்த அந்தக்கால மக்களுக்கு அவரது நற்செய்தி முழுமையாகச் சென்றடைந்ததன் விளைவு ஒரே சமயத்தில் பத்தாயிரம் பேர் மனந் திரும்பினார்கள் சத்தியத்தை ஏற்றுக்கொண்டனர்! பிரிட்டோ என்ற தனது பெயரை அருளானந்தர் என்ற தமிழ்ப் பெயராக மாற்றினார்.

மறவர்கள் அதிகமிருந்த அந்த பகுதியில் மறவரின் அரசன் ஒருவன் அருளானந்தரை முதல் தடவையாக சிறைப்பிடித்தான். எங்கிருந்து வந்தாயோ அங்கேயே ஓடு என்று விரட்டப் பட்டார் அருளானந்தர்.

ருசி கண்ட பூனை சும்மா இருக்குமா? இயேசுவையல்லா ருசித்தவர் அவர்? ஆறு வருடம் கழித்து மீண்டும் தமிழகம் வந்தவர், அவர் மட்டுமல்ல, தன்னோடு இருபத்தி நான்கு பேரையும் அழைத்து வந்திருந்தார்.

சன்னியாசியாக வாழ்ந்தவர், மாமிசத்தை துறந்தார். இலை தழைகளை சமைத்து சாப்பிட்டார். எளிமையின் மொத்த உருவமாக வாழ்ந்தவர், பல இடங்களுக்குச் சென்று இயேசு வைப் போதித்தார்.


ஒரியூர் தேவாலயம்

மறவ இனத்தின் இளவரசனான தடியத் தேவன், அருளானந்தரின் போதனைகளில் லயித்து, தனது பாவ வாழ்க்கையைத் துறக்கச் சம்மதித்தான்.

வந்தது வினை..!

எண்ணற்ற மனைவிகளை வைத்திருந்த தடியத்தேவன், இயேசுவின் பாதையில் நடக்க விரும்பியதால் ஒவ்வொரு மனைவியரையும் அவர்களுக்கென்று தனி ஏற்பாடு செய்து, அவர் களிடமிருந்து சிறிது சிறிதாக விலகலானார்.

பக்கத்து இடத்தின் மன்னரான சேதுபதி யின் உறவுப்பெண் ஒருத்தியும் தடியத்தேவனின் பல மனைவிகளுள் ஒரு மனைவி என்பதால், அவளும் விலக்கி வைக்கப்படவே வந்ததே கோபம் சேதுபதிக்கு!

மீண்டும் சிறை பிடிக்கப்பட்டார் அருளானந்தர்...

ஒரியூர் மண்ணில் அவர் தலை துண்டிக் கப்பட்டு, இரத்தம் ஆறாக பாய, உயிர் துறந்தார் அருளானந்தர்! இரத்தம் சிந்தப்பட்ட அந்தப் பகுதி மண், சிவப்பாக மாற இன்றுவரை சிவந்த மணல் பகுதியாகவே காட்சியளிக்கிறது.

இரத்த சாட்சியாக ஒரியூரில் மடிந்தார்; ஒரியூர் அருளானந்தர் என்று அழைக்கப்பட்ட அவர் புனிதராக போப்பாண்டவரால் உயர்த்தப் பட்டார்.

**இன்றும் சிவந்த மண்ணை உடலில் பூசி, தீராத வியாதியையும் தீர்த்துக் கொள்கின்றனர் அவரது திருத்தலம் நாடிவரும் பக்தர்கள்.**



# பைபிள் வசனமும், நாட்டு நடப்பும் கூடிய கட்டுரைக் கதைகள்

கட்டுரைக் கதை –1

## வெட்கப்பட வேண்டியது யார்?

இயேசுவை சிலுவையிலறையப் போகிறார்கள் என்றதும் துண்டைக்காணோம் துணியைக் காணோம் என்று ஓடியவர்கள்தான் இயேசுவின் பன்னிரு சீடர்கள்.

ஆனால், அதே சீடர்கள் இயேசுவின் உயிர்ப்பைப் பார்த்தார்கள். துணிவடைந்தார்கள். உலக முழுவதும் சென் று நற்செய்தி அறிவித்தார்கள். பலனாக, அத்தனை பேரும் துடிதுடிக்கச் சாகடிப்பட்டார்கள் ஒருவரைத்தவிர.

அதனைத் தொடர்ந்து, காலங்காலமாக அவர்கள் வழி வந்த ஆதி கிறஸ்தவர்கள் அவர்களும் அவர்களது பங்குக்கு தியாக வாழ்வை வாழ்ந்தார்கள். வேத சாட்சிகளாக மரித்தார்கள்.

இப்பொழுது என்ன நடக்கிறது?

கிராமந்தோறும் காளான் போன்று பல சபைகள், தவறு... கம்பெனிகள்...!

இவர்கள் கிறிஸ்துவை அறியாதவர்களையா மனந் திருப்புகிறார்கள்? இல்லை..! அடுத்த சபை வாசலிலே நின்று தனது சபைக்கு ஆள் பிடிக்கிறார்கள்.

தெரிந்தே நடக்கிறது... தெரியாமலும் நடக்கிறது...

வெட்கப்பட வேண்டியது யார்..?

உண்மையான கிறிஸ்துவனா? அல்லது சாட்சாத் கிறிஸ்துவா..?

> “இதனின்று மாறுபட்ட போதனை யோடு ஒருவன் நாடி வந்தால் உங்களை வந்தால் அவனை உங்கள் இல்லத்திலேயே ஏற்காதீர்கள்”
>
> (2 அருளப்பர் 10)

கட்டுரைக் கதை –2

## வெளியே சென்னால் வெட்கக் கேடு

‘யாருக்கும் எப்போதும் எதுவும் நடக்கலாம்’ என்பதே இன்றைய நிலைமை.

வீட்டில் வளர்க்கப்படும் கோழிகளில் ஒன்றை வந்த விருந்தினரை உபசரிக்கலாமோயென்ற நோக்கில் தனது கையால் எப்படி கொல்வது என்று அடுத்த வீட்டிலுள்ள அக்காவையோ, அண்ணனையோ கூப்பிட்டு கோழியின் கழுத்தை அறுக்க வைத்தது அந்தக்காலம்.

“சரக்” என்று மனிதனையே கழுத்தறுப்பதோ இந்தக் காலம். நூறு பேர் பார்த்துக் கொண்டிருந்தாலும் அறுக்க வந்தவன் அவ்வளவு சாதாரணமாக இதனைச் செய்ய முடிகிறது என்றால்.

சுவாதி கொலையைப் பற்றி நினைத்து வெட்கப்பட வேண்டியது யார்?

அந்த ஊரா.... இந்த நாடா...?

**“ கோழைகள், விசுவாசமற்றவர்கள், அறுவருப்புக்குரியவர்கள், கொலைகாரர்கள், காமுகர்கள், சூனியம் வைப்பவர்கள் சிலை வழிபாட்டின் முதலிய பொய்யர்கள் அனை வருக்கும் எரியும் கந்தக நெருப்பு உரிய பங்காகும் ”**

**( திருவெளிப்பாடு 21:8 )**

கட்டுரைக் கதை –3

## உஷார் போலிகள் ஜாக்கிரதை

நான் கிறிஸ்தவன்... தவறு... தவறு... நல்ல கிறிஸ்தவன். வாரத்திற்கொருமுறை உபவாசம். முழுநேரம் ஊழியமே செய்கிறேன். எந்தவித அடையாளமில்லாது நான் இறைவனை வணங்குகிறேன். விக்கிரக ஆராதனை கூடாதல்லவா.?

ஆழமான தண்ணீரில் மூழ்கி எழுந்து ஞானஸ் நானம் பெற்றிருக்கிறேன். ஆம். அதன் மூலம் உண்மையாகவே இரட்சிக்கப்பட்டவன். பக்கத்து வீட்டுக்காரனைப் பாருங்கள். அவனும் கிறிஸ்தவர் தான். தினமும் கோயிலுக்கு செல்கிறான். அவன் செய்வதெல்லாம் விக்கிரக ஆராதனை! அவன் இரட்சிக்கப்படவில்லை. ஆனால் தானம், தர்மம், மகிழ்ச்சியாயிருக்கிறேன் என்று ஊருக்கு காட்டி தன்னையும் ஏமாற்றி ஊரையும் ஏமாற்றுகிறான்.

இரட்சிக்கப்பட்ட என்னைப்பற்றி மேலும் சில செய்திகள்...

வேலை வாங்கித் தருகிறேன் என்று பலரிடம் காசு வாங்கினேன்... இது தப்பா...


ஐந்து வருடமாக வேலை கிடைக்கவில்லை தான் அரசாங்கம் அதற்குள் மாறிவிட்டது, அதற்கு நான் என்ன செய்ய!

லட்சக் கணக்கில் வட்டிக்கு வாங்கி என்னிடம் கொடுத்தவர்கள் காசு கேட்டு எனது வீட்டுக்கு எப்படி வரலாம்? நான் “சாச்” நடத்துகிறேன். தொந்தரவு செய்யலாமா?

இறைவனிடம் நான் அவர்களுக்காக வேண்டு கிறேன். ஏனென்றால் நான் “ட்ரூ” கிறிஸ்டியன்.

**“போலி அப்போஸ்தலர்கள், வஞ்சக வேலையாட்கள கிறிஸ்துவின் வேலையாட்களாக நடிப்பவர்கள் இவர்கள். சாத்தான் கூட ஒளியின் தூதனாக நடிக்கிறான். அவர்களுடைய முடிவு அவர்களது செயல்களுக்கேற்றதாகவே இருக்கும்”** (2 கொரிந்தியர் 11 : 13–15)

தொடர்ச்சி 41–ம் பக்கம்




### நேற்றும் - இன்றும்

# திருச்சபைக்காக இரத்தம் சிந்தியவர்கள் 20 கோடி பேர்... நாளை.?

எம். சேவியர் சந்திரகுமார்

கிறிஸ்தவர்களுக்கென்ன அவர்கள் பணத்துக்காகவும், பதவிக்காகவும் மதம் மாறியவர்கள் என்று மிகச் சுலபமாகக் கூறிவிடுகிறார்கள் நமது இந்து மத சகோதரர்கள்.

சமீப காலங்களில் கிறிஸ்தவர்களை கோதுமைகிறிஸ்தவர்கள், பரங்கியர்என்று ஒதுக்கி வைத்த இவர்கள் இன்று கூட "கிறிஸ்தவர்களா அவர்கள் அந்நிய தேவனை திணிப்பவர்கள். அவர்களது கலாச்சாரம் படுமோசம் என்று துூர்ப்பிரச்சாரம் செய்வதிலேயே குறியாக இருப்பதையும் பார்க்கிறோம்.

உண்மை அதுவல்ல...

பலவிதமான சித்திரவதைகட்கு உட்படுத்தப்பட்டு உயிரோடு கொல்லப்பட்டு, கிறிஸ்து வாழ்ந்து மறைந்த காலந்தொட்டு இன்றுவரை சுமார் 20 கோடிக்கும் மேற்பட்டவர்கள் சாகடிக்கப்பட்டு அவர்களது இரத்தத்தால் கட்டப்பட்டதுதான் கிறிஸ்தவம் என்றால் ஆச்சரியமாக உள்ளதல்லவா?


கிறிஸ்து மரித்து, உயிர்த்து, அதன்பின் பல நாட்கள் அவரது சீடர்களான 12 பேருடன் இருந்து பரலோகத்துக்கு எழுந்தருளியபோது ஒரு கட்டளை கொடுத்தார்.

"இதோ நீங்கள் புறப்பட்டு, உலகமெங்கும் போய் எனது ராஜ்ஜியத்தின் சுவிசேஷத்தை போதியுங்கள். உலக முடியும் வரை நான் உங்களோடு இருப்பேன்" என்று கூறியவாறே அவர் விண்ணுலகம் சென்றார்.

அதுதான் அவர்கள் உந்து சக்தி!

வில்லிலிருந்து புறப்படும் அம்புபோல உடனே புறப்பட்டார்கள் அந்த பன்னிரெண்டு பேரும்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள்! அந்தக் காலத்திலென்ன சேட்டிலைட்டா விட்டிருந்தார்கள் வழிகாட்டுவதற்கு? போக்குவரத்து வசதிகளா இருந்தன? மொத்த பரப்பும், காடு, மேடாக, பள்ளத்தாக்குகளாக இருந்தபோது அவ்வளவு



இயேசுவின் பன்னிரு வன்முறையில் பலியாகிய விதம்

# ரத்தம் சிந்தும் கிறிஸ்தவர்கள் - சில புள்ளி விவரங்கள்

1. உலகமுழுவதும் முதல் நூற்றாண்டிலிருந்து 19-ம் நூற்றாண்டு வரை எவ்வளவு - கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்களோ அதற்கு சமமான எண்ணிக்கையிலான கிறிஸ்தவர்கள் 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கொல்லப் பட்டிருக்கிறார்கள் என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

2. 2011 அறிக்கையின்படி இந்த 20-ம் நூற்றாண்டில் மட்டும் வருடத்திற்கு சுமார் ஒரு லட்சம் பேர் கிறிஸ்துவுக்காக கொல்லப்பட்டுள்ளார்கள்.

3. ஏறத்தாழ 20 கோடி பேர் இதுவரையில் உலக முழுவதிலுமிருந்து கொல்லப்பட்டுள்ளார்கள்.

4. உலக மொத்த கிறிஸ்தவ ஜனத்தொகையில் 70 சதவீதம் பேர் அவர்களுக்கு ஆபத்தான இடத்திலேயே வாழ்கிறார்கள்.

5. உலகிலேயே வடக்கு கொரியாவைத்தான் கிறிஸ்தவர்களுக் கெதிரான மோசமான நாடு என்று கூறலாம்.

6. நைஜீரியாவில் 2010-ம் ஆண்டின் ஒரு கிராமமே முற்றிலு மாக அழிக்கப்பட்டு, மொத்த கிறிஸ்தவர்களும், நிர்மூலமாக்கப் பட்டார்கள்.

7. ஈரான் அரசியல் சட்டப்படி, எவனொருவன் அதாவது இஸ்லாமியர்கள் கிறிஸ்தவராக மாறினால் உடனே மரணம்தான்

8. இந்தோனேசியாவில் 1000 பேரை ஒரே நேரத்தில் அங்குள்ள முஸ்லிம்கள் மொத்தமாக கொன்று போட்டார்கள்.

9. ஈராக்கைப் பொறுத்தவரையில் சதாம் உசேன் காலம் வரையிலும் கிறிஸ்தவ ஜனத் தொகையின் பாதிபேர் நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

10. சிரியாவில் கூட 2012-ல் சுமார் எண்பதாயிரம் பேரை அங்குள்ள அரசாங்கம் அவரவர் வீடுகளிலிருந்து துரத்தி யுள்ளது.

11. இன்றைய சூழ்நிலையில், இஸ்லாமிய நாடுகளை எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு ஐந்து நிமிடத்திற்கும் ஒரு கிறிஸ்தவர் வீதம் கழுத்து அறுக்கப்பட்டோ, துப்பாக்கியால் சுடப்பட்டோ, சித்திர வதைகளுக்குள்ளாக்கப்பட்டோ இஸ்லாமியர்களால் கொல்லப்படு கிறார்கள். இவர்களெல்லாம் இஸ்லாம் மதத்துக்கு வர மறுத்து கிறிஸ்துவுக்காக சாட்சியாக மரிப்பவர்கள்.

12. இன்றைய காலக் கட்டத்தில் சுமார் 71 நாடுகளில் கிறிஸ்தவர்கள் அச்சத்துடனேயே வாழ்கிறார்கள். அவற்றும் கிறிஸ்தவர்களை அச்சுறுத்தும் ‘டாப்டென்” நாடுகள் என்று எடுத்துக் கொண்டால் அது லேயாஸ், உஸ்பெகிஸ்தான், ஈரான், ஏமன், மால்டிவ்ஸ், சோமாலியா, சவுதி அரேபியா, ஆப்கானிஸ்தான், ஈராக் மற்றும் வடகொரியா ஆகியவையாகும்.

கச்சிதமாக உலகின் பல திசைகளிலுமல்லவா சென்றார்கள்?

அந்தக் காலத்தில் உலக முழுவதும் என்ன வழிபாடு நடந்தது, யார் உலகத்தை கையில் வைத்திருந்தது. இன்று போலவே அன்றும் மொத்த உலகமும் சாத்தானிடம்தானிருந்தது.

வாதைகள், ஆவிகளை அவரவர் "கலாச் சாரத்திற்கு" தகுந்தபடி, பேரிட்டு, இயற்கை யையும் சேர்த்து வணங்கி வந்தார்கள்.

கஷ்டப்பட்டு உலகின் பல பகுதிகளுக்கு ஆங்காங்கே சென்று சேர்ந்த பன்னிரெண்டு பேருக்கும் என்ன "ஒபாமாவுக்கு" கிடைக்கும் வரவேற்பா கிடைத்தது?

பன்னிரண்டில் ஒருவரைத் தவிர மற்ற அனைவரையும் என்ன செய்தது இந்த உலகம்?

தலையை வெட்டி எறிந்தார்கள், சிலுவை யில் தலைகீழாக அறைந்தார்கள், கழுத்தை நெறித் தும், தண்ணீரில் மூழ்கடித்தும் கொன்றார்கள்.

"ஆஹா கொன்றுவிட்டோம் தொலைந் தார்கள்" என்று ஒருவேளை அவரைக் கொன்ற வர்கள் நினைத்திருக்கலாம்.

ஆனால் அன்று விதைக்கப்பட்டதே அந்த இரத்தம் அதுவும் சாதாரண ரத்தமா? இறைவனால் ஆசீர்வதித்து அனுப்பப்பட்டவர் களுடைய ரத்தமல்லவா?

இன்று உலகில் 250 கோடி மக்களுக்கு மேல் பெரும்பான்மையானவர்களாக கிறிஸ்த வர்கள் உருவாகுமளவுக்கு சக்தி கொடுத்தது அந்த இரத்தம்தான். அந்த பதினொரு பேருடைய ரத்தம் மட்டும்தானா சிந்தப்பட்டது?

ஒன்றல்ல, இரண்டல்ல, சுமார் 20 கோடி கிறிஸ்தவர்கள் இன்றுவரை பல்வேறு வன்முறை களால் உயிரிழந்துள்ளார்கள்.

நேற்றும்... இன்றும் சரி... நாளை...?

"இதோ கடைசிக் காலத்தில் உலகம் தோன்றிய காலந் தொடங்கி என்றுமே பார்த்திரா தபடி மகா உபத்திரமான காலம் வரும்."

என்று இயேசு முன்னறிவித்திருப் பதைப் பார்க்கும்போது இனி வரும் ஆக்கினைகளின்


சிறைப்பிடிக்கப்படுகிறார்கள்


கைகள் பின்னால் கட்டப்படுகின்றன


முகம் துணியால் மறைக்கப்படுகின்றார்


தலைகளை வெட்டுவதற்கு முன்

அளவு கூடுதலாக இருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

"அப்பொழுது உங்களை வேதனை கட்குக் கையளிப்பார்கள். கொலை

செய்வார்கள், என் பெயருக்காக எல்லா மக்களும் உங்களை வெறுப்பார்கள். அப்போது பலர் இடறல்படுவார்கள், ஒருவரையொருவர் காட்டிக் கொடுப்பார்கள், ஒருவரையொருவர் வெறுப்பார்கள், "போலிக் தீர்க்கதரிசிகள் தோன்றி பலரை வஞ்சிப்பார்கள்", (மத்தேயு 24:9 & 10) என்று வரப்போகும் ஆக்கினை பற்றிய செய்தி இவ்வாறு நீண்டு கொண்டே போகிறது.

"அதுசரி... நாளை என்றால், இன்னும் பத்தாயிரம் ஆண்டுகள் கழித்தா... அப்பாடா நாம் தப்பித்தோம் என்று நிம்மதிப் பெருமூச்சு விடுகிறீர்களா?

இதோ வாசலிலேயே வந்து தட்டுகிறார் களே ஐ.எஸ். தீவிரவாதிகள்?

நாள்தோறும் பார்க்கிறோமே செய்தித் தாள்களில் கழுத்தறுப்பு, குண்டு வெடிப்பு என்று இதுதான் கடைசிக் காலத்தின் ஆரம்பம்.

"அப்படித்தான்" என்கிறார்கள் வேதத் தையும் நாட்டு நடப்பையும் அலசும் ஒரு சாரார்.

ஏற்கெனவே கூறியபடி சுமார் 71 நாடு களில் கிறிஸ்தவர்களுக்கு பாதுகாப்பு இல்லை யென்றாலும், கிறிஸ்தவர்கள் உடனுக்குடன் கொல்லப்படுவதென்னவோ இஸ்லாமிய நாடுகளில்தான்.

அதுவும் எப்படி?

காலம் முன்னேறுகின்ற வேகத்தின்படி கொல்லுவதிலும் வேகம் காட்டினால்தானே அவன் அறிவுள்ள மனிதன்? அதனால்தான் முற்றிலும் புதிய முறையில், அதாவது துள்ளத் துடிக்க... கதற... கதற... சில இடங்களில் ஒருவர் கழுத்தை வாகாகப் பிடிக்க, துணி கட்டப்பட்டு முகத்தை மறைத்திருக்கும் நிலையில், பின்னா லிருந்து "சரக்... சரக்..." என்று தலையைத் துண் டாக்கி அதனைக் காட்சிப்பொருளாகக் காட்டு கிறார்கள்.

எஞ்சிய கிறிஸ்தவர்களுக்கு உடனே ஒழுங்குமுறையாக கிறிஸ்துவை மறுதவித்து விட்டு, இஸ்லாம் வந்து சேர்ந்து விடு, சேரா விட்டால் இதோ உங்களுக்கும் இதே கதிதான்" என்கின்றனர் இவர்கள்.

யார் இவர்கள்?

சமீபத்தில் கொல்லப்பட்ட மகா பயங்கர வாதி ஒசாமா பின்லேடனின் வழித்தோன்றலான அல் பாக்தாதி தலைமையிலான ஐ.எஸ். தீவிரவாத அமைப்பினர்தான்!

ஏற்கெனவே சிரியா மற்றும் ஈராக்கின் பல பகுதிகளை தன் வசப்படுத்தி "இஸ்லாமிய நாடு" என்ற புதிய நாட்டையே வடிவமைத்து விட்டிருக்கிறார்கள் இவர்கள்.

முதற் கட்டமாக பிற இஸ்லாமிய நாடு களையும் அதன்பின்னர் படிப்படியாக எல்லா



நாடுகளையும் தன் வசப்படுத்தி ஒட்டுமொத்த உலகத்தையும் வன்முறையால் தன் கைவசப் படுத்துவதே இவர்களது நோக்கம்.

ஏன் இப்படிச் செய்கிறீர்கள்?

இஸ்லாம் இப்படியா சொல்கிறது? என்று இவர்களிடம் கேட்டால் அப்பாவியாக இவர்கள் சொல்லுவது "நாங்கள் தான் இஸ்லாத்தை உண்மையாகக் கடைப்பிடிப்பவர்கள்" என்கின்றனர்.

"இஸ்லாம் கூறியபடிதான் நாங்கள் நடக்கிறோம்" என்கிறார்கள் இவர்கள்.

"திருடுபவனின்வலதுகைதுண்டிக்கப்பட வேண்டும். இஸ்லாத்தையோ, இறைத்தூதர் களையோ பழிப்பவர்கள் மற்றும் இஸ்லாத்தி லிருந்து வேறு மதங்களுக்குச் செல்பவர்கள் இவர்களுக்கு தண்டனை மரணம்தான்" என்று இந்தச் சட்டம் கூறுவதாக இவர்கள் சொல் கிறார்கள்.

ஆனால், இதைத்தான் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு குதிக்கிறார்கள். இந்த ஐ.எஸ். தீவிரவாதிகள்.

ஆனால் கடந்த ஜூலை மாதம் 30—ம் தேதி புதிய தலைமுறை தொலைக்காட்சிக்கு பேட்டியளித்திருக்கும், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் ஜவாஹிருல்லா கூறும் பொழுது 'ஐ.எஸ். தீவிரவாதிகள் இஸ்லாத்துக்கு எதிரானவர்கள்' என்று விளக்கம் கூறியிருப் பதையும் இங்கு கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆக, இவ்வாறு வரிந்து கட்டிக்கொண்டு இறங்கியுள்ள இந்த ஐ.எஸ். தீவிரவாதிகளின் வேகத்தைப் பார்த்தால் இதுதான் கடைசிக் காலத்தின் ஆரம்பமா என்றே கேட்கத் தோன்று கிறது.

அந்திக்கிறிஸ்து இவர்களது அமைப்பிலி ருந்து தோன்றுவானா என்று ஆளாளுக்கு ஒரு கணக்கைப் போட ஆரும்பிக்குமளவுக்கு இவர்களது கொட்டத்தின் உக்கிரம் அதிகப்பட் டுக்கொண்டே போகிறது.

பைபிள் என்ன சொல்லுகிறது?

"இயேசுவுக்கு சான்று பகர்ந்து கடவுளது வார்த்தையை அறிவித்ததற்காக **தலை வெட்டுண்டவர்களின்** ஆண்மாக்களை கண்டேன்" (திருவெளிப்பாடு 20 : 4)

**உஷார்....** ●

கட்டுரைக் கதை –4 35-ம் பக்கம் தொடர்ச்சி...

## ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் திருவிழா!

பிரச்சாரம் தூள் பறக்கிறது. செய்தித் தாள்களில் தொலைக்காட்சிகளில், தெருவோரங்களில்! பொது மேடைகளில் வெயிலும் மழையிலும் ஆடி ஓடி அலைந்து வாக்கு சேகரிக்கிறார்கள். அடேயப்பா... மக்கள் மனதிலும் புதிய உணர்ச்சி புது வேகம்..

நல்லவர்கள் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற நல்லெண்ணம் பலருக்கு! ஜனநாயகக் கடமையாற்ற வேண்டுமென்ற நோக்கில் வீட்டைவிட்டுவெளியேவராதவர்கூட, மெனக் கெட்டு வாக்குச்சாவடி சென்று தனது ஒற்றை ஓட்டினை தகுந்தவருக்கு செலுத்தி விட்டு திரும்பி வரும்போது நடக்கிறாரே ராஜ நடை, எதையோ சாதித்தது போன்று..!

வாக்களிக்கும் அதே நாளில் கடைசி நிமிட நேரத்தில் ஏதோ ஒரு சிலர் திபு திபு என்று வருகிறார்கள். ஒரு கையில் மறைத்து வைத்திருக்கும் பண நோட்டுகள்! எந்தக் கட்சி பத்து ரூபாய் அதிகம் கொடுத்தார்களென ஒரு சிறிய கணக்கீடு. மள மள வென்று குத்துகிறார் கள். அவர்களும் சாதித்து விட்டார்கள்!!

தேர்தல் முடிவுதான் அத்தனை பேரையும் முட்டாள்களாக்கி கடைசியில் யார் ஜெயித்தது?

சிந்தித்து வாக்களித்த 95 சதவீதம் பேரும் முட்டாள்கள்தான். சிறிய வித்தியாசத்தில் தரமில்லாதவரை ஜெயிக்க வைத்தவர்களாகிய அந்த 5 சதவீதம் பேர்தான் அறிவாளிகள். இந்நாட்டு குடிமகன்கள்.

# மலேசியாவில் புகழ்பெற்ற மாதாவின் அன்னை புனித அன்னம்மாள் ஆலயச் சிறப்பு



திருமதி. அன்னக்கிளி ராசைய்யா
எழுத்து - மலேசியாவாழ் (வடவை)

மக்களின் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு ஏற்ற சீர் சிறப்புடன் செழுமையும் நிறைந்துள்ள நாடு மலேசியா நாடு.

இந்த நாட்டைச் சுற்றிலுமுள்ள பெரும் பாலான இடங்களெல்லாம் பார்ப்போர் கண்களையும் உள்ளத்தையும் மகிழ்வில் கவரும் அழகுடனும். அழகான தோற்றங்களிலும் நிறங்களிலுமான வனப்புடைய மலைகளும், பச்சைபசேலென எப்போதும் இளமையும் செழுமையுமாய் காட்சியளிக்கும் மரங்கள் அடர்ந்த காடுகளும் நிறைந்துள்ளன.

மேலும் வகை வகையான காய் கனிகளும் கிழங்கு மற்றும் தானிய வகைகளும் தாராளமாய் தரும் மரம் செடி, கொடி, பயிர் வகைகளும் அவற்றிற்குத் தேவையான நீர் நில வளங்களும் நல்ல அமைப்போடும் பராமரிப்போடும் நிறைந்து இருக்கிறது இங்கு.



மலேசியாவிலுள்ள மக்களின் வாழ்வு மலாய்க்காரர்கள், சீனர்கள், இந்தியர்கள் ஆகிய மூன்று மூவினத்தவரின் கூட்டு ஆட்சியில் நடத்தப்பட்டு வரும் ஒன்றிணைந்த சமுதாய வாழ்வாகும்.

ஆட்சி மேற்கூறிய மூவினத் தாராலும் நடத்தப்படுகிற தென்றாலும் வேறு பல



நாட்டினரும் இனத்தவரும் இங்கு வந்திருந்து குடிமக்களாகிய மலேசியர்களாக வாழ்கிறார்கள். ஆதலால் இங்கு வாழும் மக்களின் ஆன்மாவுக்கு வழிகாட்டும் சமயங்கள் மிகுதியாக உள்ளன. இருப்பினும் இங்கு கொண்டாடப்படும் சமய விழாக்களில் இன சமய வேறுபாடு பார்க்காமல் பல இன சமய மக்களிடையேயுமிருந்து விழாக் களைக் கண்டு மகிழவும், விழாக்களில் கடமை யோடு பங்குபெறவும், பக்தியோடு தாங்கள் நேர்ந்து கேட்டுப் பெற்றிருந்த வேண்டுதல்களை செலுத்தவும், வேண்டிய வரங்களுக்காக மன்றா டவும் மக்கள் பேரார்வமாய் வந்து கூடி கொண் டாடும் மிகப் பிரபலமான விழாவில் முக்கிய மானது, புக்கிட் மொர்த்தாஜம் என்றும் பெயர் சொல்லப்படும் பேரூரில் நடைபெறும் புனித அன்னம்மாள் திருநாள் கொண்டாட்ட விழா.

சத்திய வேதமாகிய கத்தோலிக்கத் திருச் சபையானது உலகமெலாம் ஆண்டுதோறும் புனித அன்னம்மாள் திரு விழாவின் நாளாக குறிக்கப்பட்டுள்ள நாள் ஜூலை மாதம் 26– ஆம் தேதியாகும். அதுவே புனித அன்னம்மாள் தினம்.


மலேசியாவில் புனித அன்னம்மாள் கோயில்கள் இந்த சுங்குரும்பையில் மட்டுமல் லாது போர்ட் கிளாங் என்னுமிடத்தில் ஒரு பங்குக்கோயிலும், கோலாம்பூரின் தென் மாநிலத் திலுள்ள சிமினி என்னுமிடத்தில் ஒரு ஆலயமும் ( யு.எம்.பி.) என்னுமிடததில் ஒரு ஆலயமும், பாமல் எஸ்டேட் என்னுமிடத்தில் ஒரு ஆலயமும் உள்ளன.

மேற்சொன்ன எல்லா இடங்களையெல் லாம் விட சுங்குரும்பை புனித அன்னம்மாள் ஆலய திருவிழாவுக்கே மலேசியாவின் எல்லா மாநிலங்களிலிருந்தும், இந்தியா, சிரிலங்கா, சிங்கப்பூர், புருபை பிலிப்பைன்ஸ், தாய்லாந்து போன்ற நாடுகளிலிருந்தும் மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து குவிகின்றார்கள்.

புனித அன்னம்மாள் அன்னாள் என்றும், விசேசமாக நம் தமிழ் மக்களால் “சந்தனமாதா” என்றும் சிறப்பு பெயரால் அழைக்கப்படு கின்றார்கள்.

பரிசுத்தமும் இரக்கமும் தயையும் நிறைந்த அன்னாளை நோக்கி மன்றாடி வரம் கேட்போர் யாராயினும் அவர்கள் கேட்கும் வரங்கள் நன்நோக்கிலான வரங்களாக இருந்தால் புனித அன்னம்மாள் அவர்களுக்காக இறைவ னிடம் மன்றாடி அவ்வரங்களை தக்கத் தருணத்தில் பெற்றுத் தந்து வருகின்றாள்.

புத்திர பாக்கியம் பெறாதிருப்போர் புனித அன்னம்மாள் வழி பரிகாரங்களும் நேர்ச்சைகளும் செய்து வேண்டி அதிசயிக்கத் தக்கதான புதுமையாய் பிள்ளைகளைப் பெற்றெ டுத்துக் கொள்வது பக்தர்கள் அனுபவத்தில் கண்டுணரும் பேருண்மையாகும்.





எனவேதான் நமது தமிழ் மக்கள் புனித அன்னம்மாளை “சந்தனமாதா” என்று சிறப்புப் பெயர் சூட்டி அழைக்கிறார்கள். யார் சந்தன மாதா அல்லது அன்னம்மாள்?

இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்ட கன்னி மரியாளாகிய தேவமாதாவைப் பெற்ற தாய் தான் புனித அன்னம்மாள்.

மண்ணுலகில் இயேசு மனிதனாய் பிறப் பதற்காக ஆதியிலிருந்தே இறைவன் ஒரு குலத்தைத் தேர்ந்தெடுத்து பராமரித்து வந்தார். அந்த குலத்தின் பெயர் தாவீது குலம். அது அரச குலம். அக்குலத்தைச் சேர்ந்தவர்கள் சுவக்கீனும் அன்னாளும் அன்னாள் என்றால் இறைவனது

VADAVAI MADHA KURALOLI, Yearly, August - 2016, RNI. No. 65270/96





அருள் என்று பொருள். சுவக்கீன் என்றால் ஆண்டவரதுதயாரிப்புஎன்பதுபொருள். அன்னம் மாள் பெத்தலகேமில் பிறந்தவள். சுலக்கீன் நாசரேத்தில் வாழ்ந்தவர். செபமும் தவமும் அவரை இறைப்பணியில் ஆழப்படுத்தியது. நன்நெறியோடு தூயவராயத் திகழ்ந்தார்.

அன்னாளோ, இறைஅன்பும்பிறர்நலமும் கொண்டு மறை நூற்களான வேத ஆகமங்களை ஆழமாகத் தெரிந்து பெண்களுக்கும் சிறுவர் சிறுமியருக்கும் மறைப்போதகம் செய்து வந்தாள். நன்நெறி, தாழ்ச்சி, தியாகம் பொறுமை, கட்டுப் பாடு யாவும் அவளில் குடிகொண்டு இருந்தது. அதனால் திருமண வாழ்வை கருதாதிருந்தாள்.

எனினும் இளமை வயதில் திருமணமாகி, குறுகிய காலத்தில் மனைவி இறைவனடி சேர்ந்த திலிருந்து ஒழுக்கசீலராகவும் மறைப்போதகராக வும் வாழ்ந்து வந்தவரான சுவக்கீனை அவரது 40 ஆம் வயதில் உறவினர்களின் வேண்டுகோளாலும் ஏற்பாட்டாலும் அன்னாளை திருமணம் செய்து கொண்டாள்.

வெகுகாலம் பிள்ளைப் பெறும் பேறு கிட்டாது சமூகத்தில் “மலடி” என்று சொல்லப் பட்டுவந்த அவள் தமது கணவரோடு தொடர்ந்து மறைப்போதகம் செய்து இறை வாழ்வு வாழ்ந்து வந்தார்.

என்ன ஆச்சரியம்! அவள் தனது முதிய வயதான காலமாகிய 90வது வயதில் கடவுளின் எண்ணத்தில் என்றென்றும் இருந்துவந்த அமல உற்பவியாம் கன்னிமரியாளை பேரற்புதமாய் பெற்றெடுத்தாள்! மரியாள் இவ்வம்சத்தில் பிறப் பாள் என்பதை இசையாஸ் ‘இறைவாக்கினர் முற்காலத்திலேயே எழுதி வைத்திருந்தார்’ “ஜெஸ்லே தண்டினின்று ஒரு தளிர் கிழம்பும் அதன் வேரிலிருந்து ஒரு மலர் எழும்பும்.”

இவ்வசனம் மரியாளின் பிறப்பைக் குறிக்கிறது என்று வேதநூல் ஆய்வாளர்கள் ஆய்ந் தறிந்து கூறியிருக்கிறார்கள். தாவீது குலத்தில் ஜெஸ்லே என்பவரின் வழித்தோன்றலே புனித சுவக்கீனும் அன்னாளும்.

ஆக சுங்குரும்பை புனித அன்னம்மாள் திருத்தலத்திற்கு வர வசதியில்லாமல் தங்கள் இடங்களிலிருந்த அன்னம்மாளை மனதில் நினைத்து மன்றாடுபவர்களுக்காகவும் இறை வனிடம்பரிந்து பேசி, மன்றாடுபவர்களுக்கு வேண்டிய வரங்களைப் பெற்று அவர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றி ஆறுதல் அளித்து வருகிறாள் புனித அன்னம்மாள்.

**புனித அன்னம்மாளே எங்கள் அனைவருக்காகவும் இறைவனிடம் மன்றாடுங்கள்.**

Owned and Published by **M. Xavier Chandrakumar** from 1/448, Pillaiyar Koil Street, Kelambakkam, Kanchipuram Dist., - 603 103. and Printed by **Syed Azamadullah,** at **Sharp Printers,** 324, Triplicane High Road, Triplicane, Chennai - 600 005. Editor. **M. Xavier Chandrakumar**